
# திராவிடநாடு



# கரையும் காங்கிரஸ்

மேற்போக்காகக் காணுகின்றவர்கள் காங்கிரஸ் வளருகின்றது—என்று கூறுகின்றார்கள். சட்டசபையில் பெருவாரி இடம், வெளியில் பெருமை, நேருவுக்குப் புகழ் என்று இவைகளை மட்டும் காணுகின்றவர்கள் 'அடேயப்பா' என்று மலைத்துப் போகின்றனர். செல்லரித்த மரம் மேலே பார்க்க நன்றாக இருக்கும். பலமாகக் காற்று சுழன்றடித்தால் அந்த மரம் பொத்தென்று வீழ்ந்தொழியும். அழகைமட்டும் காணுகின்றவர்களுக்கு இது தெரியாது. ஆனால் ஆராய்ந்து பார்க்கின்றவருக்கு இந்த மரம் விழப்போகிறது என்ற உண்மை புலனாகும்.

காங்கிரஸ் மரமும் அதைப் போலவே கண்ணுக்கு இனிய காட்சியை நல்குகின்றது, வெளிப்பூச்சில் பகட்டுப் பேச்சில்; என்றாலும் அது சொத்தை மரம்—பட்டுப்போனது என்பதை உணருகின்றவர்கள் இல்லாமல் இல்லை.

எமக்கு எத்தனை இடம் சட்டசபையில் — எங்கள் நேருவுக்கு எங்கெங்கு வரவேற்பு விருந்து—அமெரிக்காவில் அய்சனோவர் அவர் வருகை எப்போது என்று வழிமேல் விழிவைத்துக் காத்திருக்கின்றார் — என்றெல்லாம் காங்கிரஸ்காரர்கள் பூரித்துப் போவதுண்டு!

இப்படி அவர்கள் இன்பம் கொண்டாடிவந்த பொழுதெல்லாம் நாம் மக்கள்படும் இன்னலைக் காட்டி 'இதுவோ புகழுக்கு அழகு?' என்று கேட்டோம். நீ என்ன கேட்பது என்று கேலி பேசியவர்கள் உண்டு. அழைத்து மகிழும் அமெரிக்காவும் உண்மையை உணர்ந்து கொள்ளும் என்று கூறினோம். அவர்களுக்கு இருந்த மகிழ்ச்சியில் நமது சொறகளை மதிக்கத் தவறிவிட்டார்கள்.

நேருவின் புகழைக்கண்டு அய்சனோவர் மயங்கிவிட்டார், ஆனால் ஒரு பத்திரிகையின் ஆசிரியர் மயங்கிடவில்லை. ஆட்சிப் பொறுப்பில் உள்ள அய்சனோவருக்கு இருப்பதைவிட ஆசிரியருக்கு ஓய்வு மிகுதி—ஆகவே அவரால் உண்மையான நேருவைக் காண முடிகின்றது. கண்டதை எடுத்துச் சொல்ல இயலுகின்றது. காரணம் அவர் அமெரிக்க நாட்டில் உள்ள பத்திரிகையின் ஆசிரியர். உண்மையைத்தான் மக்கள் அங்கே மதிப்பர். அதனால் அவர் குறிப்பிடுகின்றார் தன்னுடைய முடிவுகளை.

"ஒருகாலத்தில் எல்லாத்துறையிலும் இந்திய மக்களின் பிரதிநிதியாக இருந்த காங்கிரஸ் இன்று வலிவிழந்துவிட்டது என்பது நன்றாகப் புலனாகின்றது. உரிமைப் போரின் சின்னமாக நேரு தலைமையில்ஒன்றுபட்டுள்ளனர். என்றாலும் இவருடைய பேரும் புகழும் மக்களை என்றைக்கும் காங்கிரஸ் கட்சியின் கீழ் வைத்திருக்க இயலாது."

என்று அமெரிக்கப் பத்திரிகை ஒன்று ஒரு முக்கியமான கட்டுரையில் குறிப்பிட்டுள்ளது. இந்தச் செய்தி இந்துவில் இடம் பெற்றிருக்கிறது.

நேருவின் புகழ் புகழ் என்று இவர்கள் பேசுகின்றார்கள் — ஆனால் அந்த ஆசிரியரோ அந்தப் புகழால் மக்கள் மயங்கிவிட மாட்டார்கள். அது போதாது காங்கிரசுக்கு என்று கூறுகின்றார். ஒரு காலத்தில் இருந்த காங்கிரஸ் இன்று இல்லை. இதை நாம் சொன்னால் நம்மவருக்குக் குமட்டுகின்றது. நேருவின் புகழ்பாடும் அமெரிக்க நாட்டுப் பத்திரிகை ஆசிரியர் சொல்லுகிறார். 'இந்து' அதை எடுத்து எழுதி இன்பம் காணுகின்றது!

காங்கிரஸ் வளர்ந்து வருகின்றது என்று கணக்குப்போட்டு மகிழுகின்றவர்கள் ஒரு கணம் இதை எண்ணிப்பார்க்க வேண்டும். விருப்பு வெறுப்புகளை விட்டுவிட்டு எண்ணிப்பார்க்க வேண்டும், அப்படி எண்ணிப் பார்த்தால் உண்மை புலனாகாமல் போகாது. அலைகடலுக்கு அப்பால் எங்கோ உள்ள ஒரு பத்திரிகையாளருக்குப் புரிந்த உண்மை அண்மையில் உள்ளவர்களுக்குப் புரியாமல் போகாது. எண்ணிப்பார்க்கின்றவர்களுக்குப் புரியும்; ஏன் காங்கிரஸ் கரைகின்றது என்பது. ஆனால் அதற்குத் துணிவு தேவை, அந்த துணிவைக் காங்கிரஸ்காரர்கள் பெறட்டும்!

★

## கண்ணீர்!

வேலூர் தோழர் ஏ. கே. மாசிலாமணி (செட்டியார்) நேருவுக்கும் தேபருக்கும் கடிதங்கள் எழுதியிருக்கிறாராம்! தன்மீது தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி எடுத்திருக்கும் ஒழுங்கு நடவடிக்கையை ஆட்சேபித்து, எழுதியிருக்கிறாராம்!!

"ஜீவரத்தினம் என்பவர் திடீரென்று தீவிர காங்கிரஸ்காரர் ஆகியிருக்கிறார். ஆனால் 1919 முதல் காங்கிரசில் இருந்துவரும்," என் மீதா நடவடிககை, என்று கேட்டிருக்கிறாராம், அவர்.

"காங்கிரஸ் என் பிறப்புரிமை. நான் 38 வருஷங்களாக உண்மையான காங்கிரஸ்காரராயிருந்து வருகிறேன். வடார்க்காடு ஜில்லாவில் நான் காங்கிரசைக் கட்டி வளர்த்திருக்கிறேன். முதல் மந்திரி காமராஜ‌ரும் பக்தவத்சலமும் சொல்வதைக் கேட்டுக்கொண்டு கக்கன் காரியங்கள் செய்கிறார்." என்று விபரமாக எழுதியிருக்கிறாராம்.

யார் யாரோ இன்று வெகு சுலபமாகக் காங்கிரசுக்குள் எடுத்தடி வைக்கும்போது, தன்னைப்போல் பாடுபட்ட காங்கிரஸ்காரர்கள் வெளியேற்றப்படுவது, மாசிலாமணியார் போன்றோருக்குக் கண்ணீரையே உண்டாக்கும். என் செய்வது! மாசிலாமணியார் என்ன? ஒரு செட்டி நாட்டு அரசரா இல்லை, நெடும்பலம் இராமலிங்கமா!!

★

# வரி 'மழை!'

15] ஆண்டு சந்தா ரூ. 8 [19—5—57] தனிப் பிரதி 16-காசு [இதழ் 44

கலக்கத்துடனுள்ளேன்!—என்று, பிரதமர் நேருவின் மருகனார், வெளியிட்டுள்ளார். பிரோஸ்காந்தி மட்டுமல்ல, டில்லி சர்க்காரின் வரவு செலவு திட்டத்தைக் குறித்து ஆச்சாரியகிருபளானி போன்றோரும், அதிருப்தியையும் திகைப்பையுமே வெளியிட்டுள்ளனர். எதிர்க்கட்சி வட்டாரங்களில் மட்டுமல்ல, இந்தியப் பாராளுமன்றத்து காங்கிரஸ் உறுப்பினர்களிடையும் கூட கலக்கமும் ஏக்கமும் தென்படுவதாக ஏடுகள் சொல்லுகின்றன.

காங்கிரஸ் அரசினர் ஆட்சிபீடம் ஏறிய நாள் முதல் டில்லியிலும் சரி, மாநிலத்திலும் சரி 'பட்ஜட்' வரப்போகிறதென்றால், 'இந்தத் தடவை என்னென்ன புதுவரிகள் வரப்போகின்றனவோ?' என்று குடி மக்கள் ஒவ்வொருவரும் எதிர்பார்க்கும் நிலையே இருந்துவருகிறது. வெள்ளையன் விட்டுப்போன 'ரிசர்வ்' நிதியையும், 1200-கோடிரூபாய் 'ஸ்டர்லிங்' நிதியையும், தீர்த்துக்கட்டியது மட்டுமின்றி, வெளிநாடுகளில் கடனுதவிகள் பெறுவதோடு, 'வரி! வரி!' என்றும் போட்டு வாட்டுகின்றனர்!!

ஒரு அரசுக்கு வரிகள்மூலம்தான் வருமானம் கிடைக்கும். அதிலும், முதலாளித்துவ அமைப்பைக் கொண்டிருக்கும் நாடுகளில் உள்ள அரசுகள், பெரும்பாலும் மக்கள் செலுத்தும் வரிகளை நம்பியே காலம் தள்ளுகின்றன! ஆலைகள், தொழிற்சாலைகள், பஸ் போக்குவரத்துகள் போன்ற இலாபம் தரக்கூடிய துறைகளை அரசினரே ஏற்று நடத்தினால் நல்ல வருமானம் பெறக்கூடும். எப்படி இரயில் போக்குவரத்து சர்க்காருடையதாக இருப்பதால், ஆண்டுதோறும் ஏராளமான வருமானம் கிடைக்கிறதோ அதுபோல, ஏனைய பொதுத் துறைகளிலும் பெறக்கூடும். துணிவுடன் அதைச் செய்ய சோஷியலிச சர்க்கார் வேண்டும்! இது 'மாடல்' சோஷியலிச அரசாகயிருப்பதால், 'ஆற்றில் ஒரு காலும் சேற்றில் ஒருகாலுமாகவே' தனது காரியங்களையெல்லாம் செய்து வருகிறது.

திரு. கிருஷ்ணமாச்சாரியார், இந்த ஆண்டு சமர்ப்பித்துள்ள வரவு செலவுத் திட்டத்தில், புதிய வரிகள் பொலபொலவென்று உதிர்ந்திருக்கின்றன! ஆண்டுதோறும் பட்டாளத்துக்கென்று அழியும் 200-கோடிபற்றிய விளக்கம் இல்லை. ஆனால், ஐந்தாண்டுத் திட்டத்துக்கான பணம் வேண்டும் என்று கூறி, பல வரிகளை அடுக்கியிருக்கிறார். வாய்க்கால்கள் மூலம் ஏரிக்குத் தண்ணீர்கொண்டுவந்து தேக்குவதுபோல, மக்களிடமிருந்து பல துறைகள் மூலம் பணம் வசூலிக்கப்பட்டு சர்க்கார் கஜானா நிரப்பப்படுகிறது. வாய்க்காலில் தண்ணீர் வர, மலைகளிலோ, மேட்டுப்பாங்கான இடத்திலோ நல்ல மழை இருக்க வேண்டுமல்லவா! அதுதான் இல்லை! அரசுக்கு வரி செலுத்துவோராகயிருக்கும் மக்கள் வசம், **வருமானம்** அதிகரித்திருந்தால், தமது செலவுபோக ஒரு பங்கை வரியாகவோ, சேமிப்பாகவோ அரசுக்குச் செலுத்த அஞ்சமாட்டார்கள். முதல் ஐந்தாண்டுத் திட்டம் முடிந்து, இரண்டாவது திட்டத்தில் ஓராண்டு ஓடியும் கூட எதிர்பார்க்கப்பட்ட வருமான உயர்வில் கால்சத விகிதம்கூட ஏற்படவில்லை என்று திட்டக் கமிஷனே தெரிவிக்கிறது! இந்த இலட்சணத்தில் வரி, வரி என்று போட்டால் மக்கள் எங்கிருந்து செலுத்துவர்?

*

வரி விதிப்பதில் **நேரடி விதிப்பு, மறைமுக விதிப்பு** (direct & indirect taxation) என்று இரண்டு முறைகள் உள்ளன! நில வரி, வருமான வரி போன்றவை, நேரடி விதிப்பாகும். விற்பனை வரி, சுங்க வரி போன்றவை மறைமுக வரியாகும்.

நிலத்தில் வாழ்வோர் இப்பொழுதே அல்லாடிக் கொண்டிருப்பதால், அவர்களிடமிருந்து அதிக வரியைப் பெற இயலாது! விற்பனை வரி, பொருள்கள் மீது வரி விதிப்பு, போன்றவைகள் மறைமுகமாயிருந்தாலும் கூட, அவைகளை வாங்கும் மக்கள் மூலமே 'கறக்கப்படுகிறது'. காப்பிக்கும் தேயிலைக்கும் புகையிலைக்கும் மண்ணெண்ணெய்க்கும் வரியை **அதிகமாக்கினால்**, அந்த உயர்வை சாதாரண குடிமகன் ஒவ்வொருத்தனும்தான் கொடுக்க நேரும். இந்தப் பொருள்களை பணம் படைத்தோர் அல்ல, ஏழை விவசாயிலிருந்து, ஆபீசில் உழைக்கும் குமாஸ்தா வரை ஒவ்வொருவரும் வாங்கியே ஆகவேண்டும். சர்க்கரை தேவைப்படாத குடும்பம், காப்பி குடிக்காத மத்யதர மக்கள், மண்ணெண்ணெய் விரும்பாத குடிசை, புகையிலை உபயோகிக்காத மக்கள், தீப்பெட்டியை வேண்டாதவர்கள், இருக்க முடியாது. இவை அனைத்தும் ஒவ்வொரு குடும்பத்துக்கும அத்யாவசியமான பொருள்களாகும்! இவைகள் மீதெல்லாம், இப்போது வரிகளை உயர்த்தியிருக்கிறார், கிருஷ்ணமாச்சாரியார்.

**சர்க்கரை விலை முன்னைவிட சரிபாதி உயரக் கூடும்.**
**அரையணாவிற்ற நெருப்புப்பெட்டி முக்காலணா ஆகலாம்.**
**காப்பியும் டீயும் சரிபாதி அதிகமாகும்.**
**மண்ணெண்ணெயின் கதியும் அதுதான்.**

இப்படி 'ஒட்டிக்கு ரெட்டி' விலைகொடுத்து வாங்கும்படியான நிலைக்கு மக்களை விரட்டுகிறது டில்லி! அதுமட்டுமல்ல, ஏழை மக்களுக்கு இப்போதுள்ள போக்குவரத்துச் சாதனம், இரயிலாகும்.

**டிக்கெட் கட்டணத்தையும் உயர்த்துகிறது, சர்க்கார்!**

**கார்டு, தந்தி கட்டணந்தையும் கூட அதிகப்படுத்தியிருக்கிறது!!**

இதையெல்லாம் கண்டதால்தான் நேருவின் மருமகனர், 'கலக்கமுற்றிருக்கிறேன்,' என்று பதிலளித்திருக்கிருர் பத்திரிகை நிருபரிடம். நாட்டின் ஒவ்வொரு மூலை முடுக்குகளிலும், டில்லியின் பட்ஜட்டைக் கண்டு திகைப்பும் வியப்பும் பரவியிருக்கிறது. மதுவிலக்கு அமுலாகிய பிறகு, சாதாரண விவசாயிகூட, தேத்தண்ணீர் குடிக்க ஆரம்பித்திருக்கிருன்—அதற்குத் தேவையான தேயிலைக்கும் வரி, சர்க்கரைக்கும் வரி! அடுப்பு எரிய வேண்டுமானல் தேவைப்படும் தீப்பெட்டிக்கும் வரி!! எப்படி சங்கடமும் சஞ்சலமும் ஏற்படாமற்போகும்?

போருக்குப் பிறகு, 'ஒன்றுக்கு மூன்று' என்கிற விகிதத்தில் வாழ்க்கைத்தரச் செலவு உயர்ந்து கிடக்கிறது என்பதை யாவரும் அறிவோம். போருக்கு முன்பு 100 ரூபாயில் குடித்தனம் நடத்திய குடும்பத்துக்கு இப்போது சுமார் 400 ரூபாயாவது தேவைப்படும் என்பது நம்முடைய கணக்கல்ல, சர்க்காருடைய புள்ளி விபரம். இந்த இலட்சணத்தில், அந்த ஏழைமக்கள் தலையிலேயே வரிகளைச் சுமத்துவதென்ருல், என்னவென்று சொல்லமுடியும்!!

✱

இப்படி ஏழைகள் தலையில் வரிகளைச் சுமத்துவதற்குப் பதில், பணம் எங்கிருக்கிறதோ, அங்கிருந்து அரசினர் பெறலாம். இந்த யோசனையைத்தான் அரசினர் நியமித்த கால்டார் எனும் அறிஞரின் குழு கூறியிருந்தது. ஆங்கிலேயரான அவர் கூறுவதற்கு முன்பே, நாட்டு நலம் விரும்பிகள் ஒவ்வொருவரும் இந்த யோசனையைச் சொல்லி வந்தனர். அப்போதெல்லாம் தயக்கம் காட்டிய அரசு, இப்போது அந்த வகைகளிலும் பணத்தைப் பெற முயற்சிக்க ஆரம்பித்துள்ளது.

பணக்காரர்களின் வசம் குவிந்துகிடக்கும் பணத்துக்கும், அவர்கள் செய்யும் செலவுகளுக்கும் வரிபோட அரசு முன்வந்திருக்கிறது, இப்போது.

கிருஷ்ணமாச்சாரியாரின் வரவு செலவுத் திட்டத்தில் குறிப்பிடக்கூடிய அம்சம் இதுதான். முற்போக்கு நினைப்பினர் அனைவரும் இந்தக் காரணத்தாலேயே, இந்த நடவடிக்கையை மட்டும் வரவேற்றிருக்கின்றனர். இதனல் மாடமாளிகைகள் தமது மந்தகாச வாழ்வைக் குறைத்துக்கொண்டு 'மத்யதர வர்க்கம் போல் ஆகிவிடும் என்று எவரும் கருதிவிடக்கூடாது! சந்துபொந்துகள் மூலம் தப்ப முயலுவர்.

ஆலைகள் மூலமும், வேறுதுறைகளிலிருந்தும் தனிப்பட்டோர் பெறும் வருமானம்முழுதுமே நாம்கூறுவதுபோல் சர்க்காரே தொழில்களை ஏற்று நடத்தினல், சர்க்காருக்கே கிடைக்கவேண்டிய வருமானம்தானே! எனவே, இதில் மகிழ்ச்சியடைய வழியில்லை. எனினும், ஏழைகள் தலையில் மட்டும் வரியைப் போட்டுவிட்டு சும்மாயிருந்தால் "இதுதான் மாடல் சோஷியலிசமா?" என்று மக்கள் கேட்டால் என்ன சொல்வது என்கிற அச்சத்தால், பணக்காரர்களுக்கும் சில வரிகளைப் போட்டிருக்கிருர்கள்.

இப்படியெல்லாம் எதற்காக வரி போடப்படுகிறது தெரியுமா? இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்துக்காம்! முழக்கமிட்டிருக்கிருர் கிருஷ்ணமாச்சாரியார்!! அதற்காகவே 80 கோடியைச் சமாளிக்க, இத்தனை வரிகளையும், அவர் போடுகிருராம்.

"ஐந்தாண்டுத் திட்டம் என்று சொல்கிறீர்களே? அது என்ன எல்லோருக்கும் உரிய ஒரு தேசிய திட்டமா, அல்லது சர்க்காரின் திட்டமா, அல்லது காங்கிரசின் திட்டமா! என்பதைத் தயவுசெய்து எனக்கு இந்த சர்க்கார் விளக்கவேண்டும். ஏனெனில், தேர்தலின்போது இந்தத் திட்டம் தங்களுக்கு மட்டுமே உரிமையானது என்று காங்கிரஸ்காரர்கள் எடுத்துச் சொன்னர்கள். இப்படியொரு திட்டத்தை வகுக்க அந்த அரசியல் கட்சியிடம் பண வசதி உண்டா, அதிலுள்ள மேதைகள் மட்டுமே இதை வகுத்தனரா, என்று அறிய நான் ஆசைப்படுகிறேன். ஏனெனில், இந்தத் திட்டத்துக்காக ஒவ்வொருவரும் தியாகம் செய்யவேண்டும் என்று கூறப்படுகிறது. தேசியத் திட்டம் என்ருல், ஒவ்வொருவருக்கும் பங்கு இருக்கிறது. ஆனல் அப்படிச் சொல்வதில்லை, காங்கிரஸ்காரர்கள். இதை விளக்கவேண்டும் தெளிவாக."

என்று டில்லி பார்லிமெண்டில் 15-தேதியன்று கேட்டிருக்கிருர் கிருபளானி. நல்ல கேள்விதான்! ஏனெனில், இது ஒரு மக்கள் திட்டம் என்று கருதப்பட்டால், இந்திய உபகண்டத்திலுள்ள ஒவ்வொரு ஏழையிடம் தலைக்கு இரண்டு மூன்று என்று கேட்டால்கூட ஆறுமாதத்துக்கு ஒருதடவைகொடுக்கக் கவலைப் படமாட்டான். இருக்கும் முப்பது கோடிக்கும் மேற்கொண்ட மக்களிடமிருந்தும், கிருஷ்ணர் எதிர்பார்க்கும் தொகை கிடைத்துவிடும். ஆனல், அப்படிக் கேட்கும் நிலையிலா, இவர்களது ஐந்தாண்டுத் திட்டம் வாழுகிறது? இல்லையே! ஏதோ ஒரு சிலர் கூடிக் கொட்டமடிக்கும் ஒரு திட்டம் என்றுதானே பலர் கருதுகின்றனர். அக்கருத்து மாற என்ன செய்தது காங்கிரஸ் அரசு? எதுவும் இல்லையே!!

இலட்சணம் இப்படியிருப்பதாலேயே, மக்கள் தலையில் கைவைத்து சுரண்ட முடிவு செய்திருக்கிறது, டில்லி. புதிய வரிகள், 'மழை'போல் உதிர்ந்திருக்கின்றன,

✱

இப்படி வரிபோட்டு வசூலிக்கும் பணம் ஐந்தாண்டுத் திட்டத்துக்கு மட்டும்தான, செலவழிக்கப்படுகிறது? அன்பர் கிருஷ்ணமாச்சாரியார் தெரிவிக்கிருர், தன்னுடைய 'பட்ஜட்' பிரசங்கத்தில். அடுத்த ஆண்டு **10**-கோடி ரூபாய்கள் செலவழிக்கப் போகிருர்களாம்! கடந்த ஆண்டு 3-கோடி செலவழிக்கப்பட்டதாம்—வருகிற ஆண்டு 10-கோடி செலவழிக்க யோசனையாம்! இது, எதற்குத் தெரியுமா? நல்லதா, கெட்டதா என்று இன்னும் நெசவாளர்களும் நிபுணர்களாலும் விவாதிக்கப்படும் கட்டத்திலே இருக்கிறதே அம்பர் சர்க்கா அதற்காகத்தான் இந்தப் பத்து கோடி!

அதற்கு அடுத்தபடியாக 1½-கோடி ரூபாய் கடந்த ஆண்டு அதிகச் செலவாயிற்ரும். எதற்காகத் தெரியுமா? அதையும், அவரே தெரிவிக்கிருர்,

**அஸ்ஸாம் பகுதியில் எடுக்கப்பட்ட இராணுவ நடவடிக்கைகளுக்காக 1½கோடி செலவாயிற்று!!**

அஸ்ஸாம் பகுதியில் என்ருல், எங்கு? நாகநாட்டுப் பகுதியில்தான்! அங்கு நடைபெறும் உரிமைக் கிளர்ச்சியை அடக்க இந்த 'அகிம்சா சர்க்கார் செலவிட்ட தொகைதான் இந்த ஒன்றரை கோடியும்!! இது அடுத்த ஆண்டும் செலவழிக்கப்படக்கூடும் என்று தெரிகிறது.

இந்த இரு 'அயிட்டங்களிலும்' மட்டுமே டில்லி அரசுக்கு 12-கோடி ரூபாய் ஆகிறது. இதே சமயத்தில் அரசினர் புதிதாக விவரிக்கும் பொருள்கள் மூலம் எவ்வளவு வரும் என்றுஎதிர்பார்க்கின்றனர் தெரியுமா

டீ 2.45கோடி
மண்ணெண்ணெய் 80-லட்சம்
காப்பி 80-லட்சம்
தீப்பெட்டி 6.2 கோடி

அந்த 'இரு அயிட்டங்களுக்கு' ஆகும் செலவைக் குறைத்தாலேபோதும்! இந்த வரிகள் இல்லாமலே செய்யலாம், ஏழை மக்களின் சுமைகள் எவ்வளவோ குறையும்!!

தபால்
இரயில்
புகையிலை
சர்க்கரை

முதலியவைகளுக்குப் போடும் வரி கூட இல்லாமல் செய்யலாம், இராணுவத்துக்கென மொத்தம் செலவழியும் **200**-கோடியைக் குறைத்தால். இப்படி இராணுவச் செலவைக் குறைக்கவேண்டும் என்கிற கருத்தை அவர்கள் போற்றும் வினுபாவே வலியுறுத்தி வருகிருர். இருந்தும் வீண் 'ஜம்பத்துக்காக' நேரு சர்க்கார் இவ்வளவு பணத்தைக் கொட்டி அழுதுவிட்டு, ஏழைகளரம் நமது தலையில் வைக்கிருர்கள்! டில்லியின் திட்டம் இப்படி—சென்னை வரவு செலவில் இன்னும் என்னென்ன வருமோ!!

அச்சமும் துயரமும்தான் இந்த சகாப்தத்தில் நம்முடைய வாழ்க்கை. கவலையே மேலிடுகிறது, கருத்தெல்லாம், குழம்புகிறது. ★

# வீரமணி

"**1806-ம்** ஆண்டு மூண்ட வேலூர் சிப்பாய்களின் புரட்சி சுதந்திர தாகத்தை மூலகாரணமாகக் கொண்டதே. பின்னர் 1857-ல் ஏற்பட்ட முதலாவது சுதந்திர யுத்தத்துக்கு இது ஒரு ஒத்திகை எனலாம்" என்று சிப்பாய்க் கலகம் பற்றி சரிதாசிரியர்களால் வர்ணிக்கப்படுவதும், முதல் சுதந்திரப் போர் என்று விடுதலை விரும்பிகளால் அழைக்கப்படுவதுமான 1857-ம் ஆண்டு புரட்சி" குறித்து, தான் தீட்டிய **"எரிமலை"** எனும் நூலில் **வீரசவர்க்கார்** குறிப்பிடுகிறார்! "சிப்பாய்கள் கிளர்ச்சி" ஏற்பட்டதன் விளைவாகத்தான், இந்திய அரசியலிலேயே ஒரு பெருத்த மாற்றம் உண்டாயிற்று என்பதை அனைவரும் அறிவர். **நானாசாகிப், ஜான்சிராணி லட்சுமி** போன்றோர் வெள்ளையர்களை எதிர்த்து வீரப்போர் புரிந்த அந்த 1857-ஐ முதல் சுதந்திர முழக்க ஆண்டெனக் கருதி, கடந்த 10-ந் தேதி அன்று நாடெங்கும் **நூறுண்டு நினைவு நாள்** கொண்டாடப்பட்டு இருக்கிறது—முற்போக்குக் கட்சிகளால். காங்கிரசினர், இந்த நாளை வருகிற ஆகஸ்டில் கொண்டாட உள்ளனராம்! அதுபோது, இந்தச் சுதந்திர எழுச்சி குறித்து பெரும் நூல் ஒன்றும் வெளியிட இருக்கிறார்கள், விபரங்களோடு! அந்த நூலில், தென்னாட்டு வீரன் **கட்டபொம்மு, வேலூர் புரட்சி** முதலியன இடம் பெறுமோ—என்னவோ!

1857-ல் நடைபெற்ற அந்த எழுச்சி பெரும்பாலும் சிற்றரசுகள் மூட்டிய தீ என்றாலும், அதில் காணப்பட்ட வீரமும் தீரமும் நெஞ்சை உலுக்கக்கூடியதாகும். வேற்றரசை எதிர்த்து, தாய் நாட்டுச் சிப்பாய்கள், தத்தமது உயிர் வெல்லமல்ல என்று கருதிச் சிந்திய குருதியும், கொடுத்த உயிர்ப்பலியும் கொஞ்சநஞ்சமல்ல. அந்த வீரப்போரின்போது, வாள் ஏந்தி, பம்பரம் எனச் சுழன்றாள், ஜான்சிராணி லட்சுமிபாய். அவளது வீரமரணம், விடுதலை விரும்பிகளின் உள்ளத்திலே, உணர்ச்சியையும் "ஒடித்தெறி உன் விலங்கை!" எனும் ஆவேசத்தையும் ஊட்டுவதாகும். அந்த உணர்ச்சிமிக்க பகுதியை, பலர் அறிவர்—எனினும் தருகிறோம்—சுதந்திரக் கனல் என்பதன் சக்தி எவ்வளவு என்பதை எடுத்துக்காட்ட! "எரிமலை" நூலில், சவர்க்கார் தரும் அந்தப் பகுதி:-

"நாற்புறமும், ஆங்கில சேனைகள் வந்து சூழ்ந்துகொண்டுவிட்டபடியால், இனித்தான் தப்புவது அரிதென்று லட்சுமிபாய்க்குப் புலனாகிவிட்டது. அதே சமயம் அவரது முதுகில் ஒரு குண்டு வந்து பாய்ந்தது. அச்சமயத்திலும் அவர் தைரியத்தை இழக்காது, மாறுவேடம் பூண்டு தன் இருபுறத்திலும் வந்துகொண்டிருந்த தோழிகளையும், ராமச்சந்திரராவ், ரகுநாதசிங் முதலிய மெய்க்காவலர்களையும் நோக்கி, "யுத்தகளத்தில் நான் வீழ்ந்தால் என் சரீரத்தை வெள்ளையர்கள் தீண்டாமல் பாதுகாக்கவேண்டியது உங்களுடைய கடமை; உங்களிடம் கடைசியாக நான் எதிர்பார்க்கும் உதவி அதுதான்" என்று கூறினார். அதைக்கேட்ட அவ்வீரர்கள் மனமுருகி, என்ன நேரினும் லட்சுமி பாயின் சரீரத்தை வெள்ளையர்கள் தொடக்கூடாதென்ற உறுதியுடன் தங்கள் குதிரைகளை ராணிக்கு அருகில் செலுத்தி இறுதிவரையில் அவரைக் காத்து நின்றனர். அச்சமயம் ராணியின் சுவீகாரப் புதல்வனான சிறுவன் தாமோதரராவ், ராமச்சந்திர தேஷ்மிக்கின் குதிரைமீது இருந்தான்.

லட்சுமிபாய்தான் பட்ட காயத்தையும் லட்சியம் செய்யாது வெள்ளையர்களை வெட்டி வீழ்த்தி முன் சென்றுகொண்டிருக்கையில் வழியில் ஒரு சிறிய கால்வாய் குறுக்கிட்டது. அவரது குதிரை, அதைத் தாண்டாது பிரமித்து நின்றுவிட்டது. குதிரையை முன் செலுத்த எவ்வளவோ முயன்றும் அது சுற்றிச் சுற்றி வந்ததே தவிர கால்வாயைத் தாண்டவில்லை. நாற்புறமும் ஆங்கில சேனைகள் சூழ்ந்துகொண்டிருந்ததால் தந்திரமாகப் பின்வாங்குவதற்கும் இடமில்லை. அதே சமயம் பல ஆங்கில சிப்பாய்கள் லட்சுமிபாய்க்கு அருகில்வந்து **ஆத்திரத்துடன் போர்புரிந்தனர்.** அப்போது ஒரு ஆங்கிலேயன் தனது கத்தியால் வெட்டவே லட்சுமிபாயின் வலது தோள் சிதைந்து இரத்தவெள்ளம் பெருகியது. அவரது **கண்** ஒன்றும் அதிர்ச்சியால் **தெறித்து வீழ்ந்தது.** அதே சமயம் மற்றொரு சிப்பாய் லட்சுமிபாயை மார்பில் ஓங்கி வெட்டவே, ராணி படுகாயமடைந்தார்.

ஆகா! அந்த வீரராணி அப்போதும் தைரியமிழக்காது, **தன்**னைப் படுகாயப்படுத்திய இரு வீரர்களையும் ஒரே மூச்சில் வெட்டி வீழ்த்திவிட்டு தாமும் குதிரை மீது சாய்ந்தார். அவரை லட்சுமிபாய் என்று அறியாத ஆங்கிலேயர்கள், பின்தங்கிய பீஷ்வாவின் சேனைகளை எதிர்ப்பதற்காகச் சென்றனர். இராமச்சந்திரராவும் இதரர்களும் உடனே ராணியைத் தாங்கி, சமீபத்திலிருந்த சங்காதாஸ் பாவா என்பவரின் கூரைக் குடிசைக்குக் கொண்டு சென்று படுக்கவைத்து அவருக்கு **தண்**ணீர் கொடுத்தனர். அவரது சரீர முழுதும் இரத்தமயமாயிருந்தது! மூர்ச்சை தெளிந்து **கண்ணைத்** திறந்தார். தன்னை வெள்ளையர்கள் தீண்டவில்லை என்பதை அறிந்ததும், அவரது முகத்தில் ஒரு புன்முறுவல் தோன்றியது. பின்னர் அவர் தன் சுவீகாரப் புதல்வனான தாமோதரராவைப் பார்த்த வண்ணம் உயிர் நீத்தார். அப்போது அவருக்கு வயது இருபத்து மூன்று. உடனே ராமச்சந்திரராவ், லட்சுமிபாய் தனக்கு இட்டிருந்த கட்டளைக்கு இணங்க அவரது உடலை குடிசைக்கு அருகில் வைத்து தகனம் செய்தார். அடிமைத்தனம் தன் உள்ளத்தைமட்டுமல்ல, சரீரத்தையும் தீண்டு முன் அவர் வீரமரணம் அடைந்தார்!!

★

# ஒற்றுமையால் உயர்ந்த நாடு (3)

கோ. கோதண்டராமன்

ஸ்விஸ் நாட்டின் ஒற்றுமை, கூட்டாட்சியால் மட்டுமின்றி, அது அனுசரிக்கும் நடுநிலைக் கொள்கையாலும், திறம்பட வளர்க்கப்படுகிறது. மத்திய காலங்களில் ஸ்விஸ்நாடு, பல முறை பிற நாடுகளுக்குக் கூலிப் படைகளை வழங்கிற்று. 1704, 1715-ம் ஆண்டுகளுக்கிடையில் மட்டும், பிரான்ஸ் நாட்டிற்காக, ஏறத்தாழ எழுபதாயிரம் ஸ்விஸ் கூலிப்படை வீரர்கள், தங்கள் ஆவியைத் தியாகம் செய்தனர். இவ்வாறு வல்லரசுகள் ஒவ்வொன்றுக்குமிடையே அடிக்கடி நிகழ்ந்த போர்களிலெல்லாம், ஸ்விஸ்நாடு மறைமுகமாகத் தலையிட்டு, ஒரு புதிய அனுபவத்தைப் பெற்றது. அவ்வாறு அது அடைந்த புதிய அனுபவம், ஸ்விஸ் நாட்டில் கூலிப்படைகளை அனுப்பும் முறையில் ஒரு புதிய கொள்கையை உருவாக்குவதற்குச் சாதகமாய் அமைந்தது. பிற நாடுகளுக்குத் தன் போர் வீரர்களைக் கூலிப் படைகளாக அனுப்பும் முறையைத் தடுப்பதற்கு ஸ்விஸ் நாடு எடுத்துக்கொண்ட முயற்சி, பிரெஞ்சுப் புரட்சியின் போது எதிர்பார்த்த பலனை அளிக்கவில்லை. எனினும், 1815-ம் ஆண்டில், ஐரோப்பிய வல்லரசுகள் வியன்னாவில் ஒன்று கூடி, ஸ்விஸ் நாட்டின் நிரந்தர நடுவு நிலைக் கொள்கையை ஏற்றுக் கொண்டன. இம்முடிவிற் கிணங்க 1848-ம் ஆண்டில் நிறைவேற்றப் பட்ட ஸ்விஸ் அரசியலமைப்புச் சட்டம், ஸ்விஸ் நாடு இராணுவ ஒப்பந்தங்களில் கலந்துகொள்வதை அடியோடு தடுத்து நிறுத்தியது. 1859-ம் ஆண்டுக்குப்பின், ஸ்விஸ் நாடு தன் கூலிப்படைகளை வேற்று நாடுகளுக்கு அனுப்பவே இல்லை, ஸ்விஸ் நாட்டிலிருந்து, தனிப்பட்ட ஸ்விஸ் குடிமக்களைப் பிறநாட்டு இராணுவங்களில் பணியாற்றுவதற்காகத் தேர்ந்தெடுக்குந் தீய பழக்கமும் நிறுத்தப்பட்டது. 1870-ம் ஆண்டில் நடந்த பிராங்கோ — பிரஷியன் போரின் போதும், 1914—1918 ஆண்டுகளுக்கிடையில் நடந்த முதலாவது உலகப் போரின்போதும், ஸ்விஸ்நாடு நடுநிலை பிறழாமல் நின்று, தன்னைக் காத்துக்கொண்டது. ஸ்விஸ் நாடு பின்பற்றிவரும் நடுவு நிலைக்கொள்கையின் காரணமாகவே, உலகநாடுகள் அதனை, அதன் "உலக நாடுகள் லீக்குக்கு உகந்த இடமாகவும்" அகில உலகத் தொழில் நிலயத்தின் இருப்பிடமாகவும், தேர்ந்தெடுத்தது. 1955-ம் ஆண்டில் ஜெனிவாவில் நடைபெற்ற உலக வல்லரசுகளின் பெருந் தலைவர் மாநாடும் ஈண்டுக் குறிப்பிடத் தக்கதாகும். நீண்ட அரசியல் விவாதத்திற்குப் பின், ஸ்விஸ் மக்கள், உலக நாடுகளின் லீகில் சில நிபந்தனைகளின் பேரில், தங்கள் நாடு சேருவதற்கு ஒப்பமளித்தனர். ஸ்விஸ் நாடு, உலக நாடுகள் சபையில் சேருவதற்கு விதித்த நிபந்தனைகளில் ஒன்று, ஸ்விஸ் அரசாங்கம் அயல் நாட்டு இராணுவ விவகாரங்கள் எதிலும் கலந்துகொள்ளாது என்பது. இரண்டாவது நிபந்தனை அந்நியத் துருப்புகள் ஸ்விஸ் நாட்டின் வழியாகச் செல்லக் கூடாது என்பது. 1920-ம் ஆண்டு பிப்ரவரிமாதம், மேற்குறித்த நிபந்தனைகளை, லீக் சபையில் உறுப்பினர்களாயிருந்த, வேற்று நாடுகள் ஏற்றுக்கொண்டதால், ஸ்விஸ் நாடு அதுமுதல் லீக்சபையில் உறுப்பினராகியது.

சார் நாட்டில் நடந்த பொது மக்கள் வாக்கெடுப்பினை மேற்பார்வையிட ஸ்விஸ்நாடு, போலீஸ் படையொன்றை அனுப்பவேண்டுமென்று லீக் சபை கோரியது. ஆனால் இக்கோரிக்கையை ஸ்விஸ் பெடரல் அரசாங்கம் நிராகரித்தது. ஸ்விஸ் நாட்டின் இந்த நிராகரிப்பை எதிர்த்து, பிரெஞ்சுப் பத்திரிகைகள், ஸ்விஸ் நாடு, லீக் சபையின் ஆணையை அவமதித்ததாகக் குற்றம் சாட்டி எழுதின. ஆனால் ஸ்விஸ் நாடு இந்த எதிர்ப்பைக் கண்டு சிறிதும் அஞ்சாது, தன்னுடைய முடிவு, தன் நடுவு நிலைக் கொள்கைக்கு முற்றிலும் பொருத்தமானதாகும் என்று கூறியது.

ஸ்விஸ் நாட்டின் நடுநிலைக் கொள்கை இருகாரணங்களை அடிப்படையாகக் கொண்டதாகும். முதலில், அது போர்க் காலத்தில் முக்கியத்துவம் வாய்ந்த ஐரோப்பாவின் பல கேந்திர ஸ்தானங்களைக் கொண்டுள்ளதால், அந்நியப் படையெடுப்பினின்று தன்னைக் காத்துக் கொள்ளும் அவசியத்தில் உள்ளதென்பது. இரண்டாவதாக பல திறப்பட்ட இனங்களை அது கொண்டுள்ளதால், நடுநிலையொழிந்த ஏனைய அயல்நாட்டுக் கொள்கைகளால், உள்நாட்டுக் குழப்பமும், கருத்து வேறுபாடுகளும் வளரக்கூடும என்று அது எண்ணியதாகும். ஜெர்மனியுடன் உறவு கொண்டால், அது தன் நாட்டில் வாழும் பிரெஞ்சு மொழி பேசுபவர்களின் கசப்பை வளர்க்கும். பிரான்சோடு தொடர்பு கொண்டால், அது ஜெர்மனி மொழி பேசுபவர்களிடையில் பகையுணர்ச்சியைத் தூண்டும். இந்த அடிப்படையில், ஸ்விஸ் நாட்டின் தேசிய ஒற்றுமைக்கு, அது கடைப்

பிடிக்கும் நடுநிலைக் கொள்கை பெரிதும் இன்றியமையாததாகியது. விண்ணகத்தியங்கும் கோள்களும், மீன்களும் எண்ணிற் பலவாயினும், எவ்வாறு தத்தம் இடங்களில் இருந்து, மண்ணில் வாழும் மக்களுக்குத் தம்மாலான ஒளியுமிழ்ந்து மகிழ்ச்சியூட்டுகிறதோ, அதைப் போலவே ஸ்விஸ் நாட்டில், பல மொழிகளைக் கொண்ட பலவினத்தார் வாழினும், அவர்கள் தேசீய ஒற்றுமைக்குத் தங்களாலான ஒத்துழைப்பை நல்குகிறார்கள் என்பது போதரும். இதுபற்றியே, ஸ்விஸ் அறிஞரொருவர், ஸ்விஸ் நாட்டின் நடுநிலைக் கொள்கை, சுதந்திரக் கொள்கை என்பதல்லாமல், அந்நாட்டின் சமத்துவத்துக்குப் பெரிதுந் தேவைப்பட்டது என்றார். இந்த நடுநிலைக்கொள்கையால் தான், 22 சர்வ வல்லமை வாய்ந்த மாநிலங்கள், மூன்று இனத்தையும், நான்கு மொழி பேசுபவரையுங் கொண்டிருந்துங்கூட ஸ்விஸ் நாடு வெற்றிகரமாக அரசோச்சுவதற்கு ஏதுவாயிற்று. இவ்விதம் ஸ்விஸ் நாடு பலதிறப்பட்ட பண்பாடு, நாகரிகம் இவைகளைப் போற்றி வளர்க்கவில்லையென்றால், அது என்றோ அழிந்து போயிருக்கும். ஸ்விஸ் நாட்டில் வாழும் பிரெஞ்சு மொழி பேசுபவர்களுக்கு, பிரான்சு நாட்டின் மீது அன்பும் அனுதாபமும் உண்டு. இதைப்போல் இத்தாலிய மொழி பேசுபவர்க்கு இத்தாலிய நாட்டின் மீது ஆழ்ந்த பற்று உண்டு. ஜெர்மன் மொழி பேசுபவர்கள் ஜெர்மனியின் மீது பற்றுள்ளவர்கள். அன்றியும் ஸ்விஸ் நாட்டில் ஒவ்வொரு இனத்தவரும் தத்தமது கலாச்சாரத்தையே பின்பற்றி வாழ்கிறார்கள். ஆனால் ஸ்விஸ் நாடு அனுசரிக்கும் நடுநிலைக் கொள்கை, ஸ்விஸ் மக்கள் தங்கள் மூல நாட்டின் மீது, வரம்பு கடந்த பற்றினைக் காட்டாவண்ணம், அவர்களுக்கிடையில் தேசீய ஒற்றுமையை வளர்த்து வருகிறது.

### ஸ்விஸ் நாட்டின் இராணுவ முறை:—

ஒரு அரசுக்குச்சிறப்பாக வேண்டப்படும் அங்கங்கள், அமைச்சு, குடி, அரண், படையென வகுத்தனர் பண்டைச் சான்றோர், போர் தொடுக்கும் இழிநோக்கு, ஒரு நாட்டிற்கு இல்லாமல் இருந்தபோதிலும், தற்பாதுகாப்புக்காகவேனும் அதற்குப்படையொன்று நிச்சயமாகத் தேவையாகும், இந்தக் கொள்கையையொட்டி ஸ்விஸ் நாடு தற்பாதுகாப்பிற்கு அகில உலகப் பாதுகாப்புக்களை மட்டும் நம்பி வாழவில்லை. ஆனால் அது தனக்கே உரித்தான இராணுவ முறை யொன்றைப் பின்பற்றுகிறது. ஸ்விஸ் அரசியல் அமைப்பு முறையின்படி, ஒவ்வொரு ஸ்விஸ் குடிமகனும் கட்டாய இராணுவ சேவை செய்ய வேண்டும், ஆனால் இந்நாட்டு இராணுவத் தேர்வு முறை ஏனைய ஐரோப்பிய நாடுகளினும் வேறுபட்டதாகும். பள்ளிகளில் நடத்தப்படும் உடற்பயிற்சி வகுப்புகளிலேயே இராணுவக் கல்வி தொடங்குகிறது. இது பின்னர் துப்பாக்கிச் சங்கங்களிலும், பிற துறைகளிலும் தொடர்ந்து நடத்தப்படுகிறது, கட்டாய இராணுவ சேவை செய்ய வேண்டுமென்ற பொறுப்பு இருபதாம் வயதில் தொடங்கி நாற்பத்தெட்டாம் வயதுவரை தொடர்கிறது. முப்பத்திரண்டாம் வயது வரை, ஸ்விஸ் குடிமகன் இராணுவத்தின் முதல் வரிசையைச் சார்ந்தவன். இவனுக்கு 'எலைட்' என்று பெயர். முப்பத்து மூன்றாம் வயதிலிருந்து நாற்பதாம் வயது வரை, அவன் இரண்டாவது வரிசையைச் சேர்ந்தவன். இவனுக்கு 'லாண்டு எவர்' என்று பெயர். நாற்பதாம் வயதிலிருந்து நாற்பத்தெட்டாம் வயது வரை இராணுவச் சேவை புரிபவர்களுக்கு 'லாண்ட்ஸ்ரம்' என்று பெயர். இவர்களுக்குப் போக்குவரத்து முதலியவைகளைக் காக்கும், எளிதான வேலைகளே கொடுக்கப்படும்.

இன்றைய ஸ்விஸ் இராணுவம் ஆறு பகுதிகளைக் கொண்டது. மூன்று குதிரைப்படை சேனைகள், நான்கு மலைப்படை சேனைகள், செயிண்ட் கோதார்டு, செயிண்ட் மாரிஸ் கோட்டைகளைக் காக்கும் விமானப்படை இவைகளை உள்ளிட்டதே ஸ்விஸ் இராணுவம். மொத்தத்தில் ஸ்விஸ் படை 'லாண்டு எவர்' 'லாண்ட்ஸ்ரம்' வீரர்களை உள்ளிட்ட நானூறாயிரம் மக்களைக் கொண்டதாகும்.

ஓராண்டுக் காலமாவது கட்டாய இராணுவ சேவை செய்யவேண்டுமென்ற சாதாரண விதிகளைப் போலல்லாமல், ஸ்விஸ் காலாட்படைக்கேனும், குதிரைப் படைக்கேனும் தேர்ந்தெடுக்கப்படும் வீரர், 65ல் இருந்து 92 நாட்கள் வரை பயிற்சி பெறுகிறார்கள். 25,000 இளம் போர் வீரர்கள் ஆண்டுதோறும் மேற்கூறப்பட்ட முதற் பயிற்சிக்கு அழைக்கப்படுகிறார்கள். பின்னர் இவர்கள் எப்பொழுதாவது, 13 நாட்களுக்கு மறுமுறைப் பயிற்சிக்கு அழைக்கப்படுகிறார்கள். சுமார் நூற்றைம்பதாயிரம் போர் வீரர்கள் ஆண்டு தோறும், இந்த மறுமுறைப் பயிற்சியில் பங்கு கொள்கிறார்கள். இவ்வாறு வண்ணங்களோடு கூடிய தங்கள் சேவையை, இந்த இளம் வீரர்கள் முடித்த பிறகு, தங்களுடைய அரசாங்கத்தின் கண்காணிப்பிற்குட்பட்டு ஆயுதங்களைத் தங்கள் வீட்டிலேயே வைத்துக் கொள்ள அனுமதிக்கப்படுகிறார்கள். பிரான்ஸ் நாட்டு இராணுவச் சேவை முறையையும், பிற நாடுகளின் இராணுவச் சேவை முறைகளைப் போலன்றி, ஸ்விஸ் இராணுவ அமைப்பில், மூன்னூறு இராணுவப் பயிற்சி ஆசிரியர்களைத் தவிர, வேறு, இராணுவச் சேவையையே தொழிலாகக் கொண்டவர்கள் கிடையாது. மேற் சொன்ன ஆசிரியர்—அதிகாரிகள், சிவில் போர் வீரர்களில் இருந்தே தேர்ந்தெடுக்கப்பட்டு, இன்னும் சிறிது அதிகப் பயிற்சி அளிக்கப்படுகிறார்கள். இந்த அதிகாரிகளில் பெரும்பாலோர், இராணுவச் சேவையையே தொழிலாகக் கொண்ட வியாபாரிகள் அல்லது அரசாங்கப் பணிமனைகளிலே வேலைபார்த்து வந்தவர்கள் ஆவார்கள். சுருங்கக்கூறின், ஸ்விஸ் நாடு, குடிமக்களைக் கொண்ட ஒரு சிறந்த இராணுவத்தைக் கொண்டிருக்கிறது. இந்த இராணுவம், ஸ்விஸ் மக்கள் எல்லோருக்கும் ஒரு அரிய பொறுப்பையுண்டாக்கியுள்ளதே தவிர, வேற்று நாட்டு இராணுவங்களைப் போல் அவ்வளவு தொல்லைகள் நிறைந்ததல்ல. இராணுவத் தொழில் வகுப்பு ஒன்றைக் கொண்டில்லையாயினும் ஸ்விஸ் இராணுவம், பிறநாட்டுக் கட்டாய இராணுவ முறைகளைப் போல் அவ்வளவு கட்டுப்பாடுகளைக் கொண்டு, நாட்டை இராணுவமயமாக ஆக்காதது குறிப்பிடத்தக்கதாகும்.

★

# "பொறுப்பு"

"கேட்டியாக்கா, கதையை! எப்பப் போனவ இவ? வீட்டிலே பச்சைச் சிசு பாலுக்குத் துடிக்குமே என்கிற கவலையிருக்கா பார்த்தியா! வேலை செய்ற வீட்டிலே, ஏதாவது பொறுக்கித்திங்க, கொடுத்திருப்பாங்க...... அதுவே சொர்க்கம்னு கிடக்கிரு. கொஞ்சமாவது பொறுப்பு இருந்தாத் தானே?"

*

"பாரடி குப்பி! மனுஷருக்குக் கொஞ்சமாவது பொறுப்பு இருக்க வேண்டாம்! தன்னந் தனியா கிடக்கிறேன் நான். என்னடா மணி 10-க்கு மேலே ஆயிட்டுதே—யாரு இருக்கா துணைக்கு என்கிற நினைப்பு இருக்க வேண்டாம்!!

*

"ஊம்...... எல்லாம் நாம்ப வந்த வழி பிரதர்! நமக்கும் வீடு இருக்கிறது, வாசல் இருக்கிறது என்று நினைத்தாத்தானே? கத்தை 'பைலை' தூக்கிப்போட்டு இன்னைக்குள் எப்படியாவது முடிக்கணும்னுட்டாரு மானேஜர்! என்ன செய்றது? கொஞ்சமாவது, நம்மையும் மனுஷன்னு மதிக்கணும்கிற, பொறுப்பு இருந்தாத் தானே!!

*

'பொறுப்பு' — என்கிற வார்த்தை எங்கெங்கே, எப்படி யெப்படி அடிபடுகிறது, என்பதை எண்ணிப் பாருங்கள், விந்தையாக இருக்கும். குப்பி வரவில்லை யென்பதால், அவளுக்குப் பொறுப்பில்லை என்று கூறிவிட்டாள், அவள் மாமியார்! கணவனுக்காகக் காத்திருக்கும் மனைவி, அவனிடம் பொறுப்பு இல்லை என்று சொல்லிப் பொருமுகிருள்! அவனே, ஆபீசில் மனிதர்களை மதிக்கவேண்டும் என்கிற பொறுப்பில்லை என்று கூறுகிருன்! ஒவ்வொருவரும், இன்னொருத்தர் மீது, பொறுப்பு இல்லை என்கிருர்கள். அவர்கள் கூறுவதையே வேதவாக்காகக் கொண்டு, குப்பி—கணவன்—மனைவி, இவர்கள் எவரிடமும் பொறுப்பே இல்லை யென்கிற முடிவுக்கு வந்துவிட முடியுமோ? தாம் பாதிக்கப்படுகிரேம் என்றதும், அதற்கு யார் காரணமோ, அவர்களுக்குப் பொறுப்பு இல்லை, இருந்தால் இப்படியெல்லாம் நடக்காது, என்று சுலபத்தில் முடிவுகட்டி விடுகிருர்கள். ஆபீசில் கணவன் தங்க நேர்ந்த விபரம், எசமானியால்தான் இருக்கவேண்டி நேரிட்ட காரணம், இவைகளை அவரவர்கள் விளக்கினல் அப்போது என்ன சொல்ல முடியும்? ஒவ்வொருவருக்கும் 'பொறுப்பு' இல்லாமலில்லை! நிச்சயம், இருக்கிறது. தன்னுடைய வீடு, தனது மனைவி, தன் உத்தியோகத்தைச் சரிவரச் செய்யவேண்டும் என்கிற பொறுப்புஅவனிடம் இல்லாமலில்லை. அதுபோல, தன் குடிசைக்கு ஓடவேண்டும், தன் குழந்தைக்குப் பால் கொடுக்கவேண்டும் என்கிற பொறுப்பு குப்பிக்கும் இல்லையென்று கூறிவிட முடியாது. ஆனல், தங்கள் தங்கள் குறைகளைக் கொட்டிக் கொள்ள, இன்னொருத்தர் மீது அந்தப் பழியைப் போடுகிருர்கள்!!

*

தன் கணவனுக்கு வீடுவாசல் என்கிற பொறுப்பில்லை என்று வருத்தபட்டாளே இல்லாள், அதே நபரைப் பற்றி, அவன் ஆபீஸ் மானேஜர் என்ன சொல்லுவார்.

"சார்! நம்ப ஆபீசிலிருக்கிருரே, தாயுமானவர். அவரைப்போல பொறுப்புள்ள ஆளைப் பார்க்க முடியாதுங்க, ஒரு மூட்டை 'பைலை'க் கொடுத்து, எப்படியாவது முடிச்சிடுங்க, என்று சொன்னேன். மனுஷன் என்ன பொறுப்பா, உட்கார்ந்து முடிச்சுக் கொடுத்தாரு தெரியுங்களா?"

மனைவி, கணவன் குறித்த நேரத்தில் வராமைக்காகக் கணவனுக்குப் பொறுப்பில்லை என்று சொல்லி விட்டாள்! ஆனல், அதே கணவனுக்கு, ஆபீசில் கிடைப்பதோ — பொறுப்புள்ளவன் என்கிற புகழ்!

எந்த குப்பியைப்பற்றி மாமியார் பொறுப்பில்லை என்று கூறினளோ, அந்தக் குப்பியைக் குறித்து, எசமானி என்ன கூறியிருப்பாள், சந்தர்ப்பம் கிடைத்தால்.

"என்ன பொறுப்பு தெரியுமா, குப்பிக்கு? வேலைக்காரி என்ருல் அப்படியல்லவா கிடைக்க வேண்டும்! வீட்டில் யாருமில்லை, தனியாக இருக்கிறேன் என்றதும், மணி 10-ஆகியும் வீட்டுக்குப் போகவில்லை, அவள்..."

இதே குப்பிக்கு மாமியார் தருவது பொறுப்பில்லாதவள் என்கிறபட்டம்! இதே குப்பி, பொறுப்பில்லாதவள் என்றுளே அந்த எசமானியைப்பற்றி அவள் கணவன் என்ன கருதுவான்?

"என்ன இருந்தாலும் என் மனைவிக்கு என்மீது இருக்கிற கவலையும் பொறுப்பும் யாருக்கு வரும் — மணி பத்தர்ச்சு சார், ஆபீசிலிருந்து வீட்டுக்கு வர. அதுவரையிலும் தானும் சாப்பிடாமல், எனக்காக வழிமேல் விழி வைத்தபடி இருந்தாள்."

*

ஒரு பக்கம் பொறுப்பில்லை என்று கூறப்படுகிறது! இன்னொரு பக்கம் அவர்களுடைய பொறுப்பைப்பற்றி புகழ் மாலை சூட்டப்படுகிறது

பொறுப்பு இல்லை என்று குற்றம் கூறுபவர்கள் யார்? பாதிக்கப்படுகிறவர்கள்! பலன் பெறுகிறவர்களோ, பாராட்டுரைதான் வழங்குகிருர்கள்!!

குப்பியின் மீது மாமியாருக்குக் கோபம்கூட இருக்கலாம் —கணவன் வரவில்லையே என்ற ஏக்கம்காரணமாயிருக்கக்கூடும் மனைவிக்கு—ஆபீசில் அதிகம் வேலை தருகிருர்களே என்று ஆத்திரத்தில் அவன் பொறுப்பில்லை என்று கூறலாம்.

சந்தர்ப்பத்தையும் சூழ்நிலையும் பொறுத்து ஒருவர் இன்னொருவருக்கு 'பொறுப்பில்லை' என்று சொல்லி விடுகிருர்களே ஒழிய, ஒவ்வொருவருக்கும் அவரவர்கள் காரியத்தில் பொறுப்பு இருக்கத்தான் இருக்கிறது! பொறுப்பு இல்லாவிடில், கட்டியமனைவி எக்கேடுகெட்டால் என்னவென்று கணவன், அலைந்து திரியலாமல்லவா? இல்லையே! ஆபீஸ் விட்டதும், நேராக வீட்டுக்குத்தானே வருகிருன். பெற்ற குழந்தை அழுதாலென்ன—கதறினலென்ன—குடும்பம் எக்கெதியில் இருந்தாலென்ன, எசமானி கொடுத்த சோறே சொர்க்கம் என்று இருந்துவிடுகிருள் குப்பி? ஒருக்காலும் இருக்கமாட்டாள்! ஏனெனில் அவரவர்களுக்கும் கவனிக்க வேண்டிய காரியங்கள் உள்ளன — அவைகளைக் கவனிக்க வேண்டிய பொறுப்பும் அவரவர்களுக்கும் இருக்கத்தான் இருக்கிறது.

எனினும், கோபம் ஏற்படும் போதோ. ஏமாற்றம் அடைகிற சமயத்திலோ எரிச்சலின் விளைவாகவோ வெகு எளிதாக இன்னொருவரை, 'பொறுப்பில்லாதவர்கள்' என்று கூறிவிடுகிரேம்—'பொறுப்பு வேண்டும்' என்று போதிக்கவும் முற்படுகிரேம் — அதிலும் தன்னுடைய கடமையை மறந்தவர்கள், பொறுப்புக்கும் கடமைக்குமுள்ள வேறுபாட்டை அறியமுடியாமல் இவ்விதம் கூறுகிருர்கள்—அவ்வளவுதான்!

★

# "காட்டில் காய்ந்த நிலா!"

**அரங்கண்ணல்**

"வெற்றி! வெற்றி! மகத்தான வெற்றி!"

"என்னப்பா சொல்லுகிறாய்? உன் ஆனந்தக் களிப்புக்கு என்ன காரணம்!"

"ஆறவுன்சு ஆட்சியென்று கேலி பேசினாயே, போன தேர்தலில். இப்போது உன்னால் என்ன சொல்லமுடியும்?"

"ஏன்! என்ன வந்துவிட்டது இப்போது?"

"முதலாவது ஐந்தாண்டுத் திட்டம் போட்டு முடிந்துவிட்டது. பசியும் பஞ்சமும் ஒழிந்துவிட்டது. பாருக்குள்ளே நல்ல நாடு, பஞ்சம் பசியில்லா எமது பாரதநாடு!!"

"அப்படியா?"

"பார், பார்! தெரியாதவனைப் போலக் கேட்கிறாய், என்னை. படத்தில் பார்க்கவில்லையோ நீ. ஒட்டியிருக்கும் போஸ்டர்கள் உன் கண்ணில்படவில்லையோ......"

"என்னபடம்? என்ன போஸ்டர்?"

சினிமாக்காட்சியில் படம் எடுத்துக்காட்டுகிறார்களே—முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின்மூலம், உணவு உற்பத்தித் துறையில் மகத்தான சாதனையைப் புரிந்துவிட்டது எங்கள் ஆட்சி. இப்போது இரண்டாவதுதிட்டத்தின் மூலம் நாடு முழுதும் தொழில் வளத்தைப் பெருக்கப்போகிறது......"

"அப்படியா? உணவு விஷயத்தில் இந்தியா முன்னேறிவிட்டது! உணவுக்கு அடுத்தபடி, தொழில் துறை — இரண்டாவது திட்டத்தில்! அதையும் சாதித்துவிடப் போகிறீர்கள்......"

"ஆமாம்! பிறகு, ஆனந்தம்—ஆனந்தமே! எமது காங்கிரசாட்சியால் நாட்டுக்கு ஆனந்தம், ஆனந்தமே!"

*

மாற்றுக் கட்சியினர் கூட மயங்கவேண்டிய அளவுக்கு இருந்தது, பிரச்சாரவேகம்.

உணவு உற்பத்தியில் மகத்தான சாதனையைச் செய்துவிட்டது—முதல் ஐந்தாண்டுத் திட்டம். ஊர்கள்தோறும் அணைகள்! நீரில்லா இடங்களிலெல்லாம் கால்வாய்கள்! பாலைவனம் பசும் சோலையாகிவிட்டது! உணவுக்காக இனி அந்நிய நாடுகளை எதிர்பார்க்கமாட்டோம்—சுயதேவையே நமது சுதந்திரத்தின் பெருமை என்றார் நேரு—அதுபோல, சுயதேவை பூர்த்தியை அடைந்துவிட்டோம்—பாகிஸ்தானில் பஞ்சமாம்! வேண்டுமா உணவுப் பொருள் என்று கேட்டிருக்கிறார், நேரு!—என்று பிரமாதமாக முழங்கின, காங்கிரஸ் பிரச்சார பீரங்கிகள்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் தொழில் வளத்தை மனதில் எண்ணியே தயாரிக்கப்பட்டுள்ளது என்றார்கள் — உணவுப் பிரச்னை முடிந்துவிட்டது என்று சொல்லி!

ஏடுகளிலும், திரைப்படங்களிலும், எடுத்துக் காட்டியது மட்டுமல்ல, உண்மையிலேயே காங்கிரஸ் மந்திரிகள் அப்படி நம்பவும் செய்தார்கள்—கால மழை, நல்ல விளைச்சல், என்று இயற்கையும் ஒத்துழைத்ததால், எல்லோரிடமும் ஒரு மன மயக்கம் ஏற்பட்டது. மயக்கம் ஏற்பட்டதே ஒழிய அரிசி விலை குறைந்ததா — ரூபாய்க்கு நாலுபடியாயிற்றா—என்று யாரும் கேட்கவில்லை. சங்கு முழக்கினர்! சந்தோஷ ஆரவாரம் செய்தனர்!!

ஆனால் உண்மை நிலை என்ன தெரியுமா? சுயதேவை இலட்சிய எல்லையை அடைந்துவிட்டோம் என்று சொல்லி, அந்நிய நாடுகளிலிருந்து உணவுப் பொருள்களை இறக்குமதி செய்யமாட்டோம், ஏனெனில் அதற்காக நிறையப் பணம் வெளி நாடுகளுக்குப் போய் விடுகிறது என்று முழக்கமிட்டார்களே, இப்போது என்ன நடக்கிறது தெரியுமா?

அமெரிக்கா
வியட்நாம்
ரஷ்யா

போன்ற நாடுகளுக்கு **'காவடி'** தூக்குகிறார்கள் - **"கவலைப்படேல்! நிரம்ப அரிசி வரும்," என்று** அறிக்கை வெளியிடுகிறார்கள் — வெளிநாடுகளிலிருந்து நிறைய தருவித்து 'ஸ்டாக்' செய்துகொள்ளப் போகிறார்களாம் — அதனால் அச்சம் தவிர் என்று அபயக்குரல் அளிக்கிறார்கள்.

அந்நிய நாட்டிலிருந்து இறக்குமதி செய்யமாட்டோம்! ஏனெனில் சுயதேவை பூர்த்தியாகிவிட்டது என்று சொன்னீர்களே!! எப்படி, படியிறங்கி, வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யத் துணிந்தார்கள் என்பீர்கள்?

இதோ, பீகார் பேசுகிறது — கேரளம் குமுறுகிறது—ஆந்திரம் திகைக்கும் நிலையில்-அஸ்ஸாமில் அவதி — மத்திய பிரதேசத்தில் எப்போது அணை உடைக்குமோ தெரியவில்லை.

**பட்டினியாலும் பசியாலும் பலர் செத்து மடிகிறார்கள்.**

எங்கே? முதல் ஐந்தாண்டுத் திட்டத்தால், உணவு உற்பத்தி வரம்பைத் தாண்டிவிட்டதாக 'ஐம்பம்' பேசினார்களே, அதே 'பாரதத்தில்' தான்! பீகாரில், பலர் செத்து மடிகிறார்களாம் — பசி தாங்க முடியாது பகலிலேயே களஞ்சியங்களில் புகுந்துகொள்ளை அடிக்கிறார்கள் என்று கேள்விப்படுகிறோம்—இந்தக் கிழமை, அந்தக் கட்டமும் தாண்டிவிட்டது, ஐயகோ பசியாலும்பட்டினியாலும் சாகின்றனர் மக்கள் என்கிறார் வாசுதேவ்பிரசாத் சின்கா என்பவர்.

இவர் யார் தெரியுமா? ஒரு M. L. A! சரிதான், சரிதான்—எதிர்க்கட்சி ஆள்போலும்! அதனால் எமது நேரு ஆட்சிக்குக் கெட்ட பெயரை உண்டு பண்ணிடும் நோக்கில் இவ்விதம் கூறியிருக்கிறார் என்று பேசக்கூடும் காங்கிரஸ் நண்பர்கள். இவர் மாற்றுக்கட்சிக்காரரல்ல, அண்மையில் தேர்வதடுக்கப்பட்ட காங்கிரஸ் M. L. A!!

இங்கே கிராமந்தோறும் சென்று மக்களை நேரில் பார்க்கப் போவதாகக் காமராஜர் கூறுகிறாரல்லவா, அதேமாதிரி, இந்த M. L. A. தன் தொகுதிக்குப் போய் பஞ்ச நிலையைப்பற்றி மக்களைக் கூட்டி வைத்து விசாரித்தாராம் — விழிகள் குளமாக, வேதனையோடு அவர்கள் கூறியதைக் கேட்டதும் ஓடோடியும் வந்து உதவி நாடி ஓலம் எழுப்பியுள்ளார்! ஏடுகளில் வந்துள்ளது செய்தி!!

இப்படி ஒரு ஏறுமாறான அலங்கோலம், மாயமான் காட்சி ஏற்பட்டிருப்பதற்கு என்ன காரணம்? இதோ 'தினமணி கதிரார்' 5-5-57 விளக்குகிறார்.

"நமது ஐந்தாண்டுத் திட்டங்களின் கீழ் எத்தனையோ அணைகள் கட்டுகிறார்கள். எத்தனையோ கோடிக்கணக்கான ரூபாய் செலவிடுகிறார்கள். லட்சக் கணக்கான பேர்களுக்கு வேலை கிடைக்கிறது. இதையெல்லாம் கண்டும் கேட்டும் மகிழ்ச்சி அடைகிறோம். வெளி நாடுகளிலிருந்து நிபுணர்கள் பாராட்டுகிறார்கள். பெருமையடைகிறோம்..."

ஐந்தாண்டுத் திட்டம் பற்றிய படப்பிடிப்பு இது! அணைகள் கட்டுகிறோம் — வெளி நாடுகளிலிருந்து குருஷேவும், புல்கானினும், அட்லீயும், அரேபிய மன்னரும் வந்து பாராட்டக்கேட்கிறோம். —அது கண்டு நாம் பெருமையும் அடைகிறோம் என்று விளக்கிவிட்டு "ஆனால்..." என்று போட்டு எழுதுகிறார்.

**"கடந்த மூன்றாண்டுகளாக வருஷந்தோறும் உணவு உற்பத்தி குறைந்து வருகிறதென்று திட்டக் கமிஷன் உப தலைவர் கூறுகிறார்!"**

கூறுவது யார்? எந்த ஐந்தாண்டுத் திட்டத்தால் சுயதேவை பூர்த்தியடைந்துவிட்டோம்என்று துந்துபி முழங்கினார்களோ, அந்த திட்டத்தை அகில இந்தியாவுக்கும் நடத்துவிக்கும் பொறுப்பு பெற்ற துணைத்தலைவர், கூறுகிறார், உற்பத்தி குறைகிறதென்று. இப்படிக் கூறிவிட்டால் என்ன சான்று, எப்படி விபரம் என்று கேட்பீர்களல்லவா? அதனால், பின் வரும் புள்ளி விவரங்களைப் பாருங்கள், என்று அவரே உங்களை அழைத்துக் காட்டுகிறார்,

| | |
|---|---|
| 1953-54ல் | 687-லட்சம் டன் |
| 1954-55ல் | 658-லட்சம் டன் |
| 1955-56ல் | 635-லட்சம் டன் |

போதுமா புள்ளி விவரம்? இப்படி உணவு உற்பத்தி குறைந்திருப்பது மட்டுமல்ல, 1956-57ல் உணவுப் பொருள்கள் விலையும் 18-சதவிகிதம் உயர்ந்திருக்கிறதாம்!

"குறைந்த விலையில்—நிறைந்த சவுகரியத்துக்கு" த்தான், திட்டம். ஆனால், பொருள் விலை உயர்ந்திருக்கிறதாம்! அதுவும் 18-சதவிகிதம்!!

இதற்கு என்ன காரணம் தெரியுமா? கதிராரே கூறுகிறார் கேளுங்கள்.

"......இந்த அணைக்கட்டுத் திட்டங்களைக் கொண்டு 63-லட்சம் ஏக்கர் நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதி செய்து தரப்பட்டிருக்க வேண்டும் என்பது திட்டக் கர்த்தர்களின் மதிப்பீடு. ஆனால் செய்திருப்பதோ. 40-லட்சம் ஏக்கருக்குத் தான். சுமார் மூன்றில் ஒரு பங்கு பாசன வளம் காட்டில் காய்ந்த நிலவாக ஆகி விட்டிருக்கிறது..."

காட்டில் காய்ந்த நிலவாக ஆகியிருக்கிறது! கதிரார், கட்டுரைக்குத் தந்த தலைப்பு 'ஆற்றோடு போகும் நீர்' என்பதாகும்!

கழனிகளுக்குப் பாய்ந்து கதிர் குலுங்க வேண்டிய நீர் ஆற்றோடு போகிறது — தேக்கிட வேண்டிய அணைகள் கட்டப்பட்டதாகச் சொல்லுகிறார்கள், வெளி நாட்டினரை அழைத்து வந்து பாராடும் கேட்கிறோம், ஆனால் 63-க்கு 40-தான் தேறுகிறது! மூன்றில் ஒரு பங்கு நீர் ஆற்றோடு போகிறது!

உணவு உற்பத்தி குறைந்ததற்குக் காரணம் தருகிறார், திட்டக் கமிஷன் துணைத் தலைவர்.

ஆனால் டில்லி உணவு மந்திரி அஜீத்பிரசாத்ஜெயின் என்ன சொல்லுகிறார் தெரியுமா? திட்டக் கமிஷன் துணைத்தலைவர் கூற்றை மறுக்கிறார்!

**போதிய உணவு உற்பத்தி இருக்கிறது. பயப்படத் தேவையில்லை.**

என்கிறார். இதென்ன விசித்திரம்! திட்டக் கமிஷன் ஒன்று கூறுவது—அதை ஒரு டில்லி மந்திரி மறுப்பதா—வேதனையும் வேடிக்கையும் கலந்ததாக உள்ளதே என்று நினைப்பீர்கள்.

**திட்டக் கமிஷனுக்கும், டில்லி சர்க்காருக்கும் இடையில் பல விஷயங்களில் இப்படியே உள்ளதாம்.**

'இந்து' ஏட்டின் நிருபர் எழுதுகிறார்—உணவு உற்பத்தி உயர்ந்ததைப்பற்றி யாருக்குப் பெருமை என்பது குறித்து இரண்டும வெவ்வேறு அறிக்கைகள் விட்டதாம்.

"சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள், உர உபயோகம், நில ஒழுங்கு ஆகியவைகளால் உற்பத்தி பெருகியது" என்று திட்டக் கமிஷன் கூறியதாம்.

டில்லி உணவு மந்திரிசபை "உற்பத்திப் பெருக்கத்துக்குக் காரணம் ஜப்பானிய சாகுபடி முறை, கம்யூனிடி பிராஜக்டு, தேசிய அபிவிருத்தித் திட்டம் ஆகியவைகள்தான்" என்றதாம்.

உற்பத்தி அதிகமானதுபோல ஒரு ஆண்டு தெரிந்ததாம்! அதற்கு யார் காரணம் என்பதிலேயே இரண்டுக்குமிடையில், இவ்வளவு பூசல்கள்! எப்படித்திட்டம் உருப்படும்!

**திட்டக்கமிஷனிடமும் சரி, சர்க்காரிடமும்சரி, எவ்வளவு உணவுப் பொருள் உற்பத்தியாகிறது, அது அதிகரிக்கவும் குறையவும் காரணம் என்ன என்பதற்கு சரியான விபரங்களே கிடையாதாம்.**

விபரங்கள் அனுப்புமாறு டில்லி ஒவ்வொரு மாகாண சர்க்கார் களுக்கும்தாக்கீது அனுப்பிற்ரும்! யாரும், சரியான காரணம் அனுப்பவில்லையாம் — ஏனெனில் அவைகளுக்கும் புரியவில்லை!

இந்த அழகிலிருக்கிறது, ஐந் தாண்டுத் திட்டமும், அதை நிறைவேற்றும் ஆட்சியும். முன் பொருமுறை ஆச்சாரியார் எழுதி ஞர், "திட்டக் கமிஷன் ஏன்பது இன்னொரு சர்க்காரைப் போல இருக்கிறது. இதனுல் யாருக்கு அதிக அதிகாரம் என்பதில் மந்திரி சபைக்கும், திட்டக் கமிஷ னுக்குமிடையில் அடிக்கடி சச்சரவு கள் உண்டாகின்றன," எனும் பொருள்பட. அது, உண்மை யென விளக்குகிறது சம்பவம்!!

இவர்கள்வாய்ச்சண்டையாவது போட்டுக்கொள்ளட்டும்-குடுமியை யாவது பிடித்துக்கொள்ளட்டும்- அதைப்பற்றி நமக்கு அக்கரை யில்லை. ஆனுல், எவ்வளவு தூரம் நாட்டையும் மக்களையும் ஆட்டிப் படைக்கிருர்கள் என்றெண்ணும் போதுதான் வேதனையாக இருக் கிறது—ஒரு கோடியா, இரண்டு கோடியா, ரூ. 3000 கோடி வரை யில் முதல் ஐந்தாண்டுத் திட்டத் துக்குச் செலவழித்தார்கள்! செல வழித்த பெருமைக்காக உணவு உற்பத்தி பெருகிவிட்டது என்ருர் கள் — இதோ, பீகார் M. L. A. அலறுகிருர் — வியட்நாமுக்கும் அமெரிக்காவுக்கும் வேண்டுகோள் அனுப்பப்படுகிறது. செலவழிந் திருப்பதோ மூவாயிரம் கோடி! கதிரார், நீர் ஆற்ரேடு போகிறது, காட்டில் காய்ந்த நிலவாகி விட் டது என்று சோகிக்கிருர்!! இப் போது, இரண்டாவது ஐந்தாண் டுத் திட்டம் எனகிருர்கள் — ரூபாய் ஆருயிரம் கோடி வரை செல விட இருக்கிருர்கள்.

இரண்டாவது திட்டப்படி முதல் ஆண் டில் தேசீய வருமானம் மூன்று சத விகிதம் அதிகரிக்கவேண்டும் என்று கணக்குப் போட்டார்களாம். ஆனுல் இதில் கால் சத விகிதம் கூட அதிகரித்த தாகத் தெரியவில்லையாம்.

இதையெல்லாம் எண்ணும் போது, இதயம் புண்ணுகிறது— ஒரு ரூபாயா, இரண்டு ரூபாயா, ஆருயிரம் கோடி ரூபாய்! அது செலவழிந்த பிறகு, என்ன விளக் கம் தரப்படுமோ!!

★




மா. கி. தசரதன்

கல்வியின் பெருமையையும், தேவையையும் பற்றிப் பல கால மாகப் பலர், பல முறையில் எடுத் துச் சொலலியுள்ளனர். அழியாத செல்வம், நின்று நிலைக்கும் தன்மையுடையது, என்றும் பயன் படக் கூடியது என்றெல்லாம் அதன் பெருமையைக் கேட் கின்ரேம். கல்வியே மனிதனுக்கு கண் என்று வள்ளுவர் கூறிவிட் டார், வற்ருத பெரும் பொரு ளாக இருந்து காலமெல்லாம் தன்னைப்பற்றி எண்ணிப் பேசிக் கொண்டிருக்க இடம் தருகின்றது அது.

ஆனுல் அந்தக் கல்வி என்பது தான் என்ன? நான்கும் நான்கும் சேர்ந்து எட்டு ஆகின்றது என்று சொல்லிடும் திறமையோ, காரிகை அறிந்து கவிபாடும் வல்லமையோ பாடிய கவியின் பொருள் விளக் கும் புலமையோ—இவைமட்டுமே —கல்வி ஆகிவிடுமா?

இவை மட்டுமே கல்வி ஆகாது என்ருல் வேறு எதுவோ சேர்ந்து தான் கல்வி முழுமை உறுகின் றது. அப்படி அரும்பாடுபட்டுப் பெறுகின்ற கல்விச் செல்வத்தி ஞல் மனிதன் எவ் வளவோ பயன் பெறுகின்ருன். சாதாரண மனி தனைப்போலவே, உண்டு, உடுத்தி உடலமைப்பைப் பெற்றிருப்பினும் கற்றவனுக்குத் தனி மதிப்பு—புகழ் இருக்கிறது. அவன் வாழ்க்கையைப் பிறர் கூர்ந்து காணுகின்றனர்.

பலருடைய போற்றுதலுக்குக் காரணமாக இருக்கும் அந்தக் கல்வியைப் பயன்படுத்தி மனிதன் செப்பவேண்டிய பணிகள் எத் துணையோ உள்ளன. அப்படி உள்ள பணிகள் என்றும் எங்கும் ஒரே தன்மையோடு இருப்பது இல்லை. உலகத்தில் நேற்று இருந்தவை எத்துணையோ இன்று இல்லை; இன்று இருப் பவை நாளையும் இருக்கும் என்ற நிலை இல்லை. உலகம் மாறிக் கொண்டேஇருப்பதினுல், புதுமை கணந்தோறும் தோன்றுவதினுல், எண்ணங்களும் புதிது புதிதாக விரிந்துகொண்டே போகின்றன. கல்வியினுல் பெறவேண்டிய பயன் செய்ய வேண்டிய பணி — இவை களும் மாறுகின்றன.

திருவள்ளுவர் காலத்தில் கற்ற தினுல் ஆய பயன் வாலறிவன் நற் ருள் தொழுவது என்று மட்டுமே மக்கள் எண்ணியிருந்திருக்கக் கூடும். திருவள்ளுவர் காலம், இன்று இல்லை. உலகம் எவ் வளவோ முறையில் மாற்றம் கண்டுவிட்டது. நாமும் அந்த மாற்றங்களுக்கு எல்லாம் நம்மை உட்படுத்திக் கொண்டு வாழுகின் ரேம். எனவே கல்வியைப் பற் றிய முறையிலும் வாலறிவன் நற் ருள் தொழுவது மட்டுமேகற்றதி ஞல் ஆய பயன் என்று கருதிககொண்டிருக்கக் கூடாது.

"உலகம் எவ்வழியில் நடக் கின்றதோ. அந்த வழியில் உல கத்தோடு ஒட்டி நடத்தலே அறி வாகும்." இதனை நமக்குக் காலத் தோடு ஒட்டி வாழ்க என்று

அன்றே வள்ளுவர் கூறிச் சென்றுள்ளார். ஆகவே நாம் கல்வியைக் கொண்டு வாழ்க்கையில் எப்படியெல்லாம் பயன் உறலாம் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

மேற்கு நாட்டு மக்களும் நம்மைப் போலவே எல்லாத் துறைகளிலும் தொடக்க நாட்களில் பழமையின் பிடியில் சிக்குண்டு கிடந்தனர். எந்தத் துறையிலும் அறியாமையும் மூட நம்பிக்கையும் அவர்களை அடிமைகொண்டிருந்த பழங்காலம் இன்று அங்கே இல்லை. புதுமை மலர்ந்துள்ளது; பொலிவு பிறந்துள்ளது.

சமயத்தைப் பற்றியதாகவும் சமயத்தைச் சிறப்பிப்பதாகவுமே முதன் முதலில் மேற்கு நாடுகளில் கல்வியின் பணி கருதப்பட்டு வந்தது. மெல்ல மெல்ல அங்கே கருத்துக்களில் புரட்சி தோன்றி செயல்படத் தொடங்கிய உடன் மேற்கு நாட்டு மனிதர் பழமையின் ஒவ்வொரு பிடியிலிருந்தும் தங்களை விடுவித்துக்கொண்டு புதிய புதிய துறைகளில் வாழ்க்கையினை தொடங்கினர், வெற்றிகண்டனர். கல்வித் துறையில் அவர்கள் அடைந்த முன்னேற்றம் முக்கியமானதாகும்.

தனி மனிதனுக்குச் சமயத்தைப் புகட்டத்தான் கல்வி பயன்பட வேண்டும் என்ற கருத்து, சமுதாயத்தின் முக்கியத்துவத்தை அவனுக்கு உணர்த்துவதற்குப் பயன்படுதல் வேண்டும் என்றாயிற்று, பின்னர் நாட்டிற்காகத் தன்னையும், தியாகத்தை ஊட்டிடும் நாட்டுப் பற்றையும்கொள்ளும்குடிமகனாக ஒவ்வொருவனும் ஆதல் வேண்டும் என்பதும் அங்கே கல்வியின் நோக்கமாகக் கருதப்பட்டது. இன்று மேற்கு நாட்டில் விஞ்ஞானத் துறையில் வெற்றி காணவேண்டும் என்பதே குறிக்கோள் எனலாம். பேக்கன் என்ற அறிஞர் அங்கே நெடுங்காலத்திற்கு முன்னமேயே 'அறிவு என்பது இயற்கையை வெல்லும் ஆற்றலே' என்று மக்கள் மனதில் அறிவின் வேட்கையைப் பிறப்பித்துள்ளார். ஆகவே அந்த மக்கள் அறிவியல் துறையில் தங்கள் ஆவலைக் காட்டுகின்றனர்.

நம் முன்னோர் முறையாயிற்றே, இதனை நாம் தள்ளுதல் தவறாகாதோ என்று அவர்கள் தயங்கியது இல்லை. ஆயிரக்கணக்காக இருந்த கடவுளர்களை எல்லாம் பிள்ளைப் பருவத்துப் பேதை விளையாட்டு என்று ஒதுக்கித் தள்ளினர். காலமெல்லாம் கிடந்த எத்துணையோ பழக்கங்களையும் முறைகளையும் கூடாது, இயலாது என்பதால் எடுத்தெறிந்துவிட்டு இயன்ற நெறியும் ஏற்புடைய வழியும் எது எனக் கண்டு வாழும் வகை தேடினர். ஆனால் நமது நாட்டிலேதான் முன்னோர் முறை —நமது காலத்திலா அதனை நீக்குவது--தள்ளுவது என்ற தயக்கம், அச்சம், நடுக்கம் இவை பிறக்கின்றன. சமுதாயத்தின் சூழ்நிலை மாறுகின்ற உலகத்தின் வேகத்தில் வேறுபட்டுக் கொண்டே இருக்கின்றது. அதற்கு ஏற்ப நாமும் நம்மையும் நம் இயல்புகளையும் மாற்றிக் கொள்ளுதல் வேண்டும். அதுதான் வளர்ச்சி எனப்படும். ஒரே நிலையில் இருப்பதனை வளர்ச்சி என்று எவ்வாறு கூறல் ஒல்லும்?

ஆனால் கற்றதனால் ஆயபயன் வாலறிவன் நற்றாள் தொழவேண்டாமா? என்று கேட்டால், தொழலாம், நன்றாகத் தொழலாம். அப்படித் தொழுகின்றவன் வாலறிவனாக—நல்லறிவனாக — தூய அறிவனாக — இருந்தால் நன்றாகத் தொழலாம். பிறப்பிலே வேற்றுமை இல்லை, எல்லோரும் எனக்கு ஒன்றே, பொருளால் பிரிவு இல்லை — சமயத்தால் பிணக்கு இல்லை — என்றிடும் வாலறிவனைத் தொழுதால் என்ன? ஆனால் பிரிவும் பேதமும் காட்டும் ஒன்றனை, மொழியிலே இது எனக்குத் தேவை, இது வேண்டாம் என்றிடுவதாகக் கூறப்படும் ஒன்றனை ஏன் தொழுதல் வேண்டும்?

வாலறிவனைத் தொழுவதா வேண்டாமா என்பது அல்ல இப்போது சிந்திக்க வேண்டுவது. கல்வியினால் உண்மையாக ஒருவன் அடைய வேண்டிய பயன் என்ன—என்ற முக்கிய பிரச்சனை தான் நாம் கவனிக்கவேண்டுவது.

பத்தாவது படித்தான், பி. ஏ. முடித்தான் என்று சொல்லிவிட்டால் மட்டும் போதுமா? கற்ற கல்வியினால் இந்த அலுவலகத்தில் வேலைகிடைத்தது—வழக்கு மன்றத்தில் வாழ்க்கை நடக்கிறது பை நிறைகின்றது பணம்--என்று கூறிவிட்டால் போதுமா? உண்மையான கல்வியின் பயன் இதிலே மட்டும் இல்லை.

இதிலே மட்டும் இல்லை என்பதினால் இதுவும் கல்வியின் பயன்தான் என்பதை அறிகின்றோம். ஆம் கற்றதினால் தன் வாழ்க்கையில் வளம் காணுதல்வேண்டும். வயிற்றுக் கவலையை மறக்கின்ற அளவுக்காவது கல்வி ஒருவனுக்குக் கைகொடுக்கவேண்டும். கல்வியே செல்வம், அதுவும் அழியாத அருஞ்செல்வம் என்று இருந்தால் வயிற்றுக் கவலை தீராது. நல்ல கல்வியிருந்தும், கவிதையில் வல்லவர்களாகமிளிர்வதும், பண்டைத் தமிழ்ப் புலவர்கள் தங்களுக்கும் தங்களை நம்பியவர்களுக்கும் ஏதுமற்ற ஏழையராய் ஏங்கி வள்ளல்களின் வண்மையை நம்பி வாழ்ந்த வாழ்க்கையை நாம் இலக்கியங்களில் காணுகின்றோம். அந்த நிலை வருந்தக் கூடியது. கற்றவன் தன் கல்வியினால் கவலையற்ற வாழ்க்கை நடாத்தும் நிலையும் வாய்ப்பும் பெறுதல் வேண்டும்.

அத்தகைய வளமிக்கவாழ்க்கை கிடைத்து குடும்பத்தில் உள்ள போது கற்றவன் ஒரு எடுத்துக் காட்டாகத் திகழவேண்டும். தான் கற்றவன் மற்றவரின் மேம்பட்டவன் என்ற எண்ணம் எங்கும் இருத்தல் கூடாது. அதுவும் அன்பு குழைந்து அகம் கலந்து மகிழ்ச்சி பொங்கி இருக்க வேண்டிய இல்லத்தில் நிச்சயம் அந்த 'தனித்தன்மை' இருத்தல் கூடாது. எல்லோரிடமும் அன்பைக் கொட்டி வாழும் நல்ல வாழ்க்கை இல்லத்தில் இருத்தல் வேண்டும்.

கல்வியினுடைய பெரும் பயன் எண்ணத்தில் ஏற்படும மாறுதலில்தான் அடங்கியுள்ளது. கற்றவனுக்கும் கல்லாதவனுக்கும் புறத்தில் மாறுபாடு ஒன்றும் இல்லை. ஆனால் அகத்தில் மாறுதல் உண்டு. அந்த மாறுபாடு 'நாம் உயர்ந்தோம்' என்ற தருக்கைத் தருகின்ற அகம்பாவ மாறுபாடாக நிச்சயம் இருத்தல் கூடாது. அகந்தையைத் தராமல் அழகு ஏற்படுத்தக் கூடிய மாறுபாடு எண்ணத்தில் எழுச்சி பெறுவதுதான்.

கற்றவனுக்கு அழகே எண்ணத் தெரிவதுதான். நான் இதை இதை அறிவேன், இந்த நூல்

எனக்கு மனப்பாடம், அந்த நூலுக்குப் புதவுரை தேவையா, பொழிப்புரைபோதுமா என்று கேட்டுவிட்டு, எண்ணத் தெரியாமல், எண்ணத்தில் புதுமை கொள்ளாமல் இருந்தால் அந்தக் கல்வியினால் பயன் ஒன்றும் விளையாது. அருஞ் செய்யுட்களை ஏந்தியுள்ள நூல்கள் எப்படித் தமக்குப் பயனின்றி இருக்கின்றனவோ அதைப்போலவே எண்ணுதற்கு இயலாதவன் கற்றவையும் ஒரு பயனுமின்றிப் போகும்.

எண்ணம் எதனையும் ஆக்கவும் அழிக்கவும் வல்லது. ‘எண்ணியார் திண்ணியராகப் பெறின் எண்ணிய எண்ணியாங்கு எய்தும்’ என்று வள்ளுவர் எண்ணத்தின் வலிவைக் குறிப்பிட்டுள்ளார். சமுதாயத்தை மாற்றவும் திருத்தவும் வல்ல எண்ணத்தைப் பெறுவது அவ்வளவு பெரிய பணியாகும்.

அடிப்படையில் நலன் தரும் எண்ணுகின்ற ஆற்றலை ஒருவன் பெற்றுவிட்டால், அவன், தான் எண்ணுவதோடு மட்டும் மன அமைதி அடையமாட்டான். இதுவரை உலகில் தோன்றிய உத்தமர்களின் எண்ணங்களில் எல்லாம் தன் மனதை ஈடுபடுத்தி அவற்றின் நன்மை தீமைகளை ஆராய்ந்து பயன் பெறுவான்—பிறரையும் பயன்பெறச்செய்வான.

அந்தப் பொலிவும் விளக்கமும் வாழ்க்கையில்இருத்தற்குமனிதன் என்றும் மனச் சோர்வு கொள்ளுதல் கூடாது. கிளர்ந்தெழும் புத்துணர்ச்சி படைத்த மனத்தினனாக இருந்தால்தான் துன்பம் நேர்கையில் துவண்டு மாண்டிடாமல், இன்பம் காணுதற்கு என்ன வழி என்று ஆராய இயலும். வாழ வழி கிடைக்கும் என்ற நம்பிக்கை கொள்ள வாய்ப்பு இருக்கும். நம்பிக்கை இல்லையேல் உலகம் இன்று இந்த அளவுக்கு முன்னேறி இருக்க இயலாது.

நாடு வரும் வரும் என்ற நம்பிக்கைதான் அமெரிக்காவைக் காட்டிற்று — ஆராய்ச்சி வெற்றி பெறும் பெறும் என்ற நம்பிக்கைதான் பல அரிய விஞ்ஞானப் புதுமைகளை உலகறியச்செய்தது. ஏழை ஒரு கவளம் சோறு கிடைக்கும் என்று நம்புவதினால்தான் உலகத்தில் இன்னும் அமைதி நிலவுகின்றது. வாழ்வு மலரும் என்ற நல்ல நம்பிக்கைதான் தொழிலாளரை இன்னும் உழைக்கத் தூண்டுகின்றது. மழை பொழியும்—மண் விளையும் என்று நம்பித்தான் உழவன் ஏரைத் தொட்டு எருதை நாடுகின்றான். வாழ்க்கையின் வற்றாத ஊற்றாக இருக்கும் இந்த அரிய பொருளாம் நம்பிக்கை ஏற்படவேண்டுமானால் அதற்கு மனம் என்றும் சோர்வு கொள்ளாதிருத்தல் வேண்டும். புதிய ஊக்கம் பிறத்தல் வேண்டும். எதிலும் ஈடுபாடு இருத்தல் வேண்டும்.

அந்த நல்ல உற்சாகத்தைத் தரத்தக்க கல்வி பயின்றால்தான் கற்றவனால் நாட்டுக்கு நன்மை. தான் நாட்டின் குடிமகன் என்ற உரிமையை உணர்வது மட்டும் இன்றி, ஒரு குடிமகன் நாட்டுக்கு ஆற்ற வேண்டிய கடமைகள் யாவை என்பதனையும் கல்வி ஒருவற்கு உணர்த்த வேண்டும். நாம் கற்றோம், நமது சுற்றம் சிறந்தால் சாலும் என்ற எண்ணம் இருத்தல் கூடாது. நம்போன்ற பிறர், சமுதாயம்—நாடு இவை நலம் பெற, பலன் துய்க்க நாம் என்ன செய்யலாம், நமது ஆற்றல் திறம். வாய்ப்பு, இவற்றை எவ்வாறு பயன்படுத்துதல் வேண்டும்—சமுதாயம் முன்னேற வேண்டுமாயின் அதற்கு ஏது செய்தல் வேண்டும் என்று பரந்த முறையில் எண்ணங்களை வளர்க்க வேண்டும். இதுதான் கல்வியினால் அதைப் பெற்றவன் மட்டுமன்றிப் பிறரும் பெறுகின்ற நல்ல பலனாகும். தொண்டு மனப்பான்மையையும், தொண்டராகும் வாய்ப்பையும் கல்வி தருமேல் அது நல்ல பயன்தந்த கல்வி எனலாம்.

அந்தப் பலனை அது தருதல் வேண்டுமாயின் கற்பவனின் மனதிலே பெரிய மாற்றத்தை விளைவிக்க வேண்டும். தான் என்ற சிறியதோர் புள்ளியை மட்டுமே சுற்றிச் சுழலும் இயல்புடைய மனம் உலகம் என்ற பேரெல்லையைப்பற்றிப் பரந்து திரியும் பக்குவம் பெறுதல் வேண்டும். மனதில் இந்த அளவுக்கு மாற்றம் விளைவிக்கவில்லையேல் அந்தக் கல்வி ஆற்றல் அற்றதுதான்— பயனற்றதுதான்—அது வெறும் காலக் கழிவுக்காகச் செய்யப் பெற்ற ஏற்பாடாக இருக்குமேயன்றி கருத்தைத்திருத்தவோ, நலன் தரவோ ஏற்படுத்தப்பட்ட நல்லதோர் அமைப்பு முறை ஆகாது.

இந்த எண்ணப்புரட்சியைத் தரவல்ல கல்வி வாய்த்தாலும் இன்னும் ஒன்று வாய்க்க வேண்டும் என்று சிலர் கூறுவர். எண்ணத்தின் எழுச்சியை, சிந்தனையின் ஆற்றலை ஏற்றுச் செயலாற்றவல்ல உடல் நலம் இருத்தல் வேண்டும். நல்ல உடல் நலம் இருந்தால்தான் எதுவும் நடக்கும் என்று கூறுவர். இதுவும் உண்மையே. கல்வியினால் ஆகும் பயன்களில் உடல் ஓம்பும் முயற்சியும் ஒன்றுதான். அறிவியல் துறையில் மனிதன் எவ்வளவோ முன்னேற்றம் கண்டுள்ள இந்த நாட்களில், எதைச் செய்யவும் ஏற்ற கருவிகள் உள்ள இந்த நாட்களிலுமா உடல் நலம் இன்றியமையாதது என்று எவரும் எண்ணார். ஏனெனில் மனமும் உடலும் ஒன்றுக்கொன்று தொடர்புகொண்டியங்கிடுவன என்பதனை இன்று எல்லோரும் அறிவர், நல்ல மனமே நல்ல உடலை வளர்க்கும் என்பதும் நல்ல உடலிலேயே நல்ல மனம் வாழும் என்பதும் நம் நாட்டு மக்கள் நெடுநாட்களாகச் சொல்லிடும் உண்மைகளாகும். ஆகவே உடல்தானே — ஏற்புச் சட்டகம் — மாயை—என்று எவரும் எண்ணார். இதனைபபேணி வளர்த்தல் பெருங் கடமை என்பது உணர்வார், கல்வியின் பயனாக அதுவும் இருத்தல் வேண்டும் எனறு கூறுவர்.

இப்படிச் சங்கிலித் தொடர் போன்று ஒன்றுக்கொன்று ஆதரவாகவும் அடிப்படையர்கவும் அமைந்திருக்கும் இந்தப் பலன்கள் மனிதனுக்கு வேண்டப்படும் இன்றியமையாத தன்மைகளாகும். இந்தத் தன்மைகளையும் தர இயலாவிடில் அது கல்வியும் ஆகாது. அதனைக் கற்றதினால் பயனும் ஏற்படாது. பயன் இல்லாத ஒன்றினைச்செய்வதும்ஒன்றுதான், செய்யாமையும் ஒன்றுதான். இன்னும் சொல்லப்போனால் செய்வதைவிடச் செய்யாமை, உழைப்பு முயற்சி, ஆகிய இரண்டும் மிச்சப்படுதல், என்ற பலனையாவது தரும்.

சங்க காலத்தில் அமைந்த கல்விமுறை தனக்கென வாழாது பிறர்க்குரியாளன் ஆவதையே வலியுறுத்தி வந்தது. அன்றைய

மக்கள் வாழ்க்கையும் தமக்காக இருந்ததைவிடப் பிறர்க்காகவே பெரிதும் பயன்பட்டு வந்தது. ஆனால் இடைக் காலத்தில் இந்த மண்ணில் விதி என்றதோர் பொல்லாங்கு சூழ்ந்த பின்னர் மனம் மாசுற்றது.

'அவனவன் விதி அது' என்ற தொடர் மனிதனின் மனதில் இருந்த ஈரத்தைத் துடைத்து விட்டது. துன்பத்தைக் கண்டு உருகும் நிலைபோய் அதனைக் கண்டபின் உருகாத கன்மனம் வந்தது.

விதிக் கொள்கையோடு இறக்கு மதியான சாத்திரங்களும்புராணங்களும் அவனவன் தன் கடமையைச் செய்வதையே வற்புறுத்தின. பிறனுக்கு உதவி செய்ய எண்ணுவது பயனற்ற செயல் என்று கூறப்பட்டது. கற்றவர்கள் என்றவர்கள் இந்தப்புராணங்களும் சாத்திரங்களும் கூறுவது போல் நடப்பவர்களாகத் தங்களைக் காட்டிக்கொள்ளத்தேவைப் பட்டது. ஆகவே கற்றவர்கள் மற்றவர்களைப்பற்றிக் கவலைப்படுவதை மறந்தனர். தங்களைப் பற்றியே எண்ணினர். ஆனால் கல்லாதவர்களோ இந்தப் போலித் தத்துவத்தை உணராததினால்— உணர்ந்தும் மதிக்காததினால் — பழையபடி பிறர்க்காகவே வாழ்ந்து வரலாயினர்.

இதனைக் கண்டவர்கள், கற்றவர்களினும் கல்லாதாவர்களே உலகிற்குப் பயன்படுவதனை உணர்ந்தனர். அந்த உணர்ச்சி தான் இடைக்காலத்தில் கற்றவர்களின்மீது வெறுப்பாக மாறியது.

'கல்லாத பேர்களே நல்லவர்கள்' என்றும் 'கற்றாரை யான் வேண்டேன், கற்பனவும் இனிய மையும்' என்றெல்லாம் இடைக் காலத்தில் கற்றவர்களையே கூற வைத்தது பயனற்ற கல்விதான்.

எனவே உண்மையிலேயே கல்வி பயன் தரவேண்டுமானால் அந்தக் கல்வியினால் கற்றவர் மட்டும் பயன் பெறுவதோடு அமையாமல் பிறருக்கும் அதனால் நன்மை ஏற்படுதல் வேண்டும்.

'அதுதான்' கற்றதனால் ஆய உண்மையான பயன் ஆகும்.

★

# அமைதலும்! அமைத்தலும்!!

டில்லிப் பாராளுமன்றத்தில் உறுதிமொழியெடுத்துக்கொண்ட உறுப்பினர்களிடையிலே மொழியுணர்ச்சிதான் தலைதூக்கி நின்றதாம்! நமது சம்பத், தர்மலிங்கம் ஆகியோர் தமிழில் உறுதிமொழி யெடுத்துக்கொண்டனர் என்பதால் இதனை நிருபர் குறிப்பிடவில்லை, ஒவ்வொரு மாநிலத்தவரும் தத்தமது மொழியிலேயே உறுதிமொழி எடுத்துக்கொண்டனராம்! "எதிர்க்கட்சியினருக்கு, ஏறுமாறாக நடப்பதுதானே எப்போது முள்ள குணம்—இது விஷயத்திலும் அப்படி நடந்துகொண்டிருக்கின்றனர். இதிலென்ன விந்தை," எனக்கேட்கத் தோன்றலாம். எதிர்க்கட்சியினர் மட்டுமல்ல, காங்கிரஸ் எம். பி. க்கள் பலரும் தத்தமது தாய்மொழிப் பற்றை வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றனர், அங்கே. தேசிய மொழியான இந்தியிலே அல்ல' தத்தமது தாய்மொழியில்!! நிருபர், மொழியுணர்ச்சியே தலைதூக்கி நின்றது, என்கிறார்.

எவ்வளவுதான் பிடித்தடைத்து "எல்லோரும் ஓரினம்! எல்லோரும் ஒரே மொழி மக்கள்!" என்று கூறிடினும், இந்திய உபகண்டத்தி லுள்ள எல்லா மக்களையும் ஒரே கட்டில் போட்டு அடைப்பது என்பது சாத்தியமல்ல என்று நாம் கூறிவருகிறோம். ஏதோ, ஆண்டாண்டு காலமாக இந்த உபகண்டம் ஒன்றாகயிருந்தது போலவும், குமரிமுனையிலிருந்து இமயகிரி வரையில் கொள்வினை கொடுப்பினை நடந்து வந்தது போலவும், கருதி, 'ஒரே நாடு! ஒரே இந்தியா!' என்று மொழிகின்றனர்,காங்கிரஸ் காரர்கள்.

வடக்கிலிருந்து தெற்காக 2000 மைலும் கிழக்கிலிருந்து மேற்காக 2500 மைலும் கொண்டது இந்திய உபகண்டம்! இதனை ஒரு தனி 'உலகம்' என்று கூறலாம் என்பது அறிஞர்கள் கருத்து ஏனெனில் பிரிட்டனை விட 15 மடங்கு அதிகமானது. ஐரோப்பா அளவுக்கு (ரஷ்யா நீங்கலாக) உள்ளது, இந்தியத் துணைக்கண்டம்.

இவ்வளவு பெரிய பூபாகத்தை ஒரே நாடு என்று கூறிக்கொள்ளும் போதும், உற்று நோக்கும் போதும், ஆனந்தம் ஏற்படக் கூடும். எவ்வளவு பெரிய தேசம் நம்முடையது என்று மார்பை நிமிர்த்துக் காட்டிக்கூட நடக்கலாம்.

ஒரு நாடு என்பதற்குள்ள இலட்சணம், அங்குள்ள மக்கள் அவர்கள் எந்த முனையிலேயிருந்தாலும் இன்னொரு முனையிலேயிருப்பவர்களைப் பற்றி ஓரளவுக்காவது அறியக் கூடியநிலைமையிலிருக்கவேண்டும். மார்வாரில் இருக்கிற பிரச்னை மதுரையிலிருப்பவர்களுக்குப் புரியாது! அஸ்ஸாமிலிருப்போரைப் பற்றி அடியக்கமங்கலத்தாருக்குத் தெரியாது!! தூரம் மட்டுமல்ல, ஆங்காங்கேயிருக்கின்றவர்களுடைய பழக்க வழக்கங்கள் வேறு; மொழிகள் வேறு; வாழ்க்கை முறைகளே வேறு.

**இது அனைத்தையும் ஒன்றாக்கி, 'இந்தியா' என்கிற பெயரையும் சூட்டிய வன் வெள்ளைக்காரனே ஆகும். அவன் ஆட்சி அரும்புவதற்கு முன் 'இந்தியா' என்கிற பேரே கிடையாது!!**

நாடெங்கும் கொண்டாடுகிறார்களே 1857ம் ஆண்டினை சிறப்போடு, அந்த 1857ல் இந்த உபகண்டம் எப்படியிருந்தது என்று எண்ணினால், உண்மையான 'உருவம்' தெரியும். 'இந்து' ஏட்டில் கிருஷ்ணமூர்த்தி என்பார் எழுதுகிறார், ஒரு கட்டுரையில்.

"அந்தச் சமயத்தில் இந்தியா என்று தேசம் இல்லை. அதனால், ஒவ்வொரு

பாகத்திலிருப்போரும், சேர்ந்து நிற்கும் வலிவும் பெற்றிருக்கவில்லை.''

ஆங்காங்கே துண்டு துண்டாக பல சிற்றரசுகள் இருந்தன. அந்த சிற்றரசுகளைக் கொஞ்சங் கொஞ்சமாக வெள்ளையர்கள் 'கபளீகரம்' செய்தனர்.

"இந்தியாவை ஒன்ருக்கி அங்கே சிறந்ததொரு நிர்வாக இயந்திரம் ஏற்படச் செய்தது பிரிட்டிஷார்தான். அவர்களால்தான் இப்பொழுது நாம் பேசுகிற ஒற்றுமை ஏற்பட்டது. வாழ்க்கையில் புதுயுகம் சந்தித்த புதுமைகளை நாமும் உணரும் சந்தர்ப்பம் உண்டாயிற்று.''

'இந்து' ஏட்டில் வெளியாகும் கட்டுரை கூறுகிறது இதனை! காங்கிரஸ்காரர்கள் வேண்டுமானல், உணர்ச்சி வேகத்தில் ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தைத் தாக்கலாம். ஆனல் அவர்கள் இன்று கூறும் 'இந்தியாவை' ஏற்படுத்திக் கொடுத்தவன் அவன்தான்.

அவன் அமைத்துக் கொடுத்த அரசபீடத்தில் நின்றுகொண்டுதான் இன்று நேருவின சர்க்கார் 'மஞ்சள்' குளிக்கிருர்கள்! அகில இந்தியா என்று பேசுகிருர்கள்!

இப்போதிருப்பதைப் போன்ற தொடர்பாவது இருந்திருந்தால் மீரத்தில் துவங்கிய 1857-ம் ஆண்டுக் கிளர்ச்சி வெற்றி பெற்றிருக்கும். அதன் தோல்விக்குள்ள முக்கிய காரணமே, அப்போது தொடர்பும் ஒரு ஐக்கியமும் எங்கும் இல்லாமற் போனதுதான்.

அந்தக் கிளர்ச்சிக்குப் பிறகு ஆங்கிலேயன் அமைத்த அரசும், அதன் மூலம் உருவான அகில இந்தியாவும்தான், காங்கிரசின் தேசிய உணர்ச்சி பரவ வழியாக அமைந்தது! காங்கிரசின் சுதந்திரக் கிளர்ச்சி இமயமுதல் குமரிவரை கொழுந்துவிட்டெரியக் காரணமாக அமைந்தது. வெள்ளையன் உருவாக்கித் தந்த 'அகில இந்தியா' என்பதில் சிறிதும் ஐயமில்லை!

டில்லியில் வெள்ளை வைஸ்ராய்--மாகாணங்கள் ஒவ்வொன்றிலும் வெள்ளைக்கவர்னர்கள், மாகாணங்களுக்குத் தலைநகரம் டில்லி, அந்த டில்லிக்குக் கட்டுப்பட்டு அதன் இஷ்டப்படி ஆடவேண்டியவைகள் மாகாணங்கள் —என்று ஒரு அரசு இயந்திரத்தை அமைத்தான் வெள்ளையன்! இப்படி, கட்டுப்பட்டு, எல்லாவற்றிற்கும் மத்திய சர்க்காரை எதிர்பார்த்தே அமையும் அரசினை ஆங்கிலத்தில் 'UNITARY GOVERNMENT' என்பார்கள்! இந்த முறைப்படி, அதிகாரங்கள்யாவும், ஒரு இடத்தில் குவிந்திருக்கும். அந்த இடத்துக்குக் கட்டுப்பட்டே ஏனைய மாநிலங்கள், இயங்க வேண்டும்.

இந்தியாவில் ஒரு "Unitary System" உருவாகச் செய்தான் வெள்ளையன்! அவனுக்கு அது தேவைப்பட்டது!

அவன் போன பிறகு, இந்தியாவுக்கு சுயராஜ்யம் கோரிய கட்சியினர், அவன் ஏற்படுத்தித்தந்த அரசு முறையை அப்படியே ஏற்றுக் கொண்டனர் — லாபமும், ஆள 'பெரிய தேசமும்' கிடைக்கிறது என்பதால். இதற்குப் பதில், இந்திய அரசியலமைப்பு இயற்றப்பட்ட காலத்தில் வேருெரு யோசனையை நிபுணர்கள் வெளியிட்டார்கள். Unitary Govtக்குப் பதில் இந்தியாவில் Federated Govt உருவாக்கலாம் என்பதுதான் Federated System முறையில், சகல பொறுப்புகளும் மாகாணங்கள் வசமேயிருக்கும் சில அதிகாரங்கள்மட்டுமே மத்திய பீடத்திடம் இருக்கும்! 'Unitary' முறையில் மத்ய பீடம், சர்வாதிகார நிலையில்இருக்கும் Federated முறையில் நேசபாவத்துடன் விளங்க நேரும்!

Federation என்று சொன்னலே 'ஒரு கூட்டமைப்பு' என்றுதான் பொருள்படும். அதாவது பலர் சேர்ந்து அமைந்த அமைப்பு என்பது கருத்து! ஆனல் Union னில் பலரைச் சேர்ந்து அமைத்த அமைப்பு என்பது பொருளாகும்!

அமைந்த—அமைத்த, என்கிற இந்த இரு சொற்களில் பதுங்கிக் கிடக்கும் அர்த்தம் சாமான்யமானதல்ல! திராவிடநாடு கோரும் நாம் Federation என்று கூறிக் கொள்ளுகிருேம். ஆந்திரம்—கேரளம்— தமிழகம்—கன்னடம் நாலும் சேர்ந்து ஒரு Federation ஆக அமைந்துகொள்ளலாம், என்கிற கருத்தில். இதில், அதிகாரங்கள் அனைத்தும் மாகாணங்கள் வசமேயிருக்கும் — சில பொது விஷயங்கள் மட்டுமே மத்திய பீடத்திடம் இருக்கும்! இந்த அரசு முறையை ஏற்றுக்கொள்ள மறுத்தனர், காங்கிரசுத் தலைவர்கள்—வெள்ளையன் சிருஷ்டித்த பீடத்தில் அமரும் ஆசையிருந்ததே ஒழிய, எதிர்காலம்பற்றி எண்ண விரும்பவில்லை. அதன் விளைவுதான், இன்று, டில்லிபீடத்துக்கு ஒவ்வொரு மாநிலத்திலும் ஏற்படும் இடியும் முழக்கமும்!

'Union' அரசாகயிருப்பதால் ஒரே மொழி வேண்டும் என்கிருர்கள்--அதைக் கேட்கும்போது ஒவ்வொருமாநிலத்திலுமிருப்போருக்கு ஆத்திரம் அதிகமாகிறதுகாங்கிரஸ் கட்சிக்காரர்களுக்குள்ளேயே, ஆத்திரம் கோபமும், ஏற்பட்டுவிடுகிறது — அதனல்தான், நிருபர் குறிப்பிடும் மொழியுணர்ச்சி அதிகமாகப் பாராளுமன்றத்திலே தலைதூக்கி நின்றிருக்கிறது!!

இப்போது மொழி அளவில் உருவாகியிருக்கும் இந்த உணர்ச்சி 'நேருவுக்குப் பிறகு' படிப்படியாக உருவாகி, 'இந்தியா' என்கிற அமைப்பைத் தூளாக்கச் செய்யும். இதில் யாரும் ஐயம் கொள்ளத் தேவையில்லை. ஏனெனில் இப்போதிருக்கும் 'யுனிடரி அரசு முறையால்' ஒற்றுமை குறையுமே ஒழிய, அதிகரிக்கச்செய்யாது!

மே 7-ந்தேதி சென்னை மேல் சபையில் பேசிய வழக்கறிஞர் V. K. ஜான் இதனையே எடுத்துரைத்திருக்கிருர், "இப்போதிருக்கிற 'யுனிடரி' அமைப்பால் எவ்வித நன்மையும் இல்லை; 'பெடரேஷனும்' இல்லை. இதனல், யாருக்கும் எவ்வித நன்மையும் இல்லை'' என்பதாக. பேரறிஞர் ஆற்காடு இலட்சுமணசாமி அவர்களும் "ஒவ்வொரு விஷயத்துக்கும் டில்லியே தாக்கீது அனுப்புகிறது. இது விரும்பத்தக்கதல்ல'' என்று குறிப்பிட்டு, நம்முடைய மந்திரிகளும் மந்திரிகளாகயிருக்க வேண்டும் என்று தெரிவித்திருக்கிருர்.

டில்லிபீடம் சகல அதிகாரங்களையும் தன் வசமே வைத்துக் கொண்டுள்ளது! மாகாணங்கள், டில்லி என்கிற மாகாணத்தின் ஜில்லாக்கள் போலவே உள்ளன!! இது, வெள்ளையன் அமைத்த முறையாகும். இது நீடிக்கும் வரையில், நேசம் குறையும் — வட்டார உணர்ச்சி தலை தூக்கும்! ஒரு நாளைக்கு மத்ய பீடத்தையே சாய்க்கும்—சந்தேகமில்லை!!

★

# ★ விபரீத எண்ணம்! ★

எட்டாவது வகுப்பைப் படித்து முடித்துத் தேர்ச்சி பெற்றவர்கள், இரண்டாண்டுக் காலம் ஆசிரியப் பயிற்சியைப் பெற்று, அதிலும் தேர்ச்சியடைந்த பிறகு, ஆசிரியர்களாக அமர்ந்து பணியாற்றி வருவது பல ஆண்டுகளாக இருந்து வருகிற ஒரு சிறந்த முறை. அத்தகைய ஆசிரியர்களுக்கு 'ஹையர் கிரேட்' ஆசிரியர்கள் என்று பெயர். அவர்கள் ஐந்தாவது வகுப்பு வரை பாடம் சொல்லிக்கொடுக்கிற உரிமை படைத்தவர்களாவர். அப்படிப்பட்ட ஆசிரியர்கள் பல்லாயிரக் கணக்கில் இருக்கிறார்கள் தமிழகத்தில். அவர்கள் அனைவரும் வியந்து பாராட்டத்தக்க அரிய பணியை ஆற்றி வருகிறார்கள் என்பதை எவரும் மறுக்க முடியாது. இன்றைய தினம் உயர்ந்த அதிகாரிகளாகவும், சிறந்த தலைவர்களாகவும், தேர்ந்த வழக்கறிஞர்களாகவும், திறமுள்ள மருத்துவர்களாகவும், புகழ்மிக்க பொறி இயல் வல்லுநர்களாகவும், தன்னிகரற்ற வணிகத் தலைவர்களாகவும் விளங்குகிறவர்கள் அத்தனை பேரும் இத்தகைய ஹையர் கிரேட் ஆசிரியர்களிடம் படித்துப் பயிற்சி பெற்றுப் பின்னர் மேல் வகுப்புகளுக்குச் சென்றவர்களே ஆவார்கள். சின்னஞ் சிறு குழந்தைகளுக்குக் கல்விப் பொருளை அள்ளி வழங்கும் அரிய செயலில் இவர்கள் கண்ணுங் கருத்துமாக இருந்து வருபவர்கள். தங்களுடைய ஊக்கம் முழுவதையும், திறமை முழுவதையும், ஆர்வம் முழுவதையும் இந்தச் செயலுக்கே அர்ப்பணித்துவிட்ட பண்பாடு மிக்கவர்கள். மிகக் குறைந்த ஊதியத்தைத்தான் பெற்று வருகிறார்கள் என்றபோதிலும், அந்தக் காரணத்தால் சிறிதளவும் சோர்வோ சோகமோ கொள்ளாமல், குழந்தைகளின் கல்வி வளர்ச்சியிலே இணையற்ற ஈடுபாட்டைக் கொண்டிருப்பவர்கள்.

ஊருக்கு நடுவிலே பரந்து விரிந்து உயர்ந்து பொலிந்து காணப்படுகிற ஆலமரம் எப்படி ஊர்மக்கள் அனைவருக்கும் உறுதுணையாக இருந்து பெரும்பயன் விளைக்கிறதோ அப்படித்தான் இவர்களும் நாட்டு மக்கள் அனைவருடைய குழந்தைகளுக்கும் நற்கல்வி என்னும் பொருளை எடுத்து எடுத்துக் கொடுத்து வருகிறார்கள். ஆலமரத்தின் நிழலும் பயனும் ஊருக்கு எவ்வளவு அவசியமோ அவ்வளவு அவசியம் நம் நாட்டுக்கு இந்த ஹையர் கிரேட் ஆசிரியர்களின் தொண்டு.

இப்படிப்பட்ட பெருமையும் பண்பும் படைத்த ஹையர் கிரேட் ஆசிரியப் பயிற்சி முறையையே இனி இல்லாமல் செய்துவிட வேண்டும் என்றும், ஆரம்ப பள்ளிகளில் ஆசிரியர்களாகப் பணியாற்ற விரும்புவோர் அனைவரும் இனி செகண்டரி கிரேட் பயிற்சியையே பெற்றாக வேண்டும் என்றும், உத்தரவுகளைப் பிறப்பிக்க இருக்கிறார்களாம் சென்னை அரசாங்கத்தார். இந்தத் தலையங்கம் எழுதப்படுகிற நேரம் வரையில் அத்தகைய உத்தரவுகள் பிறப்பிக்கப்படவில்லை. ஆனால் விரைவில் அத்தகைய உத்தரவுகள் வரும் என்று சொல்லப்படுகிறது. அப்படிச் சொல்லப்படுவது உண்மையானால் முற்றிலும் தவறான ஏற்பாடுகள் இவை என்பதை, அரசாங்கத்தாருக்கு மிக மிகப் பணிவோடு — ஆனால் மிக மிக உறுதியோடு எடுத்துச் சொல்ல விரும்புகிறோம் நாம்.

ஹையர் கிரேட் பயிற்சி முறை இருத்தல் கூடாது என்பதற்கான நியாயமான காரணம் எதையும் இதுவரை எவரும் கூறியதில்லை. ஹையர் கிரேட் ஆசிரியர்கள் போதுமான தகுதியும் திறமையும் படைத்தவர்களாக இருக்கமாட்டார்கள் என்று ஒரு சாரார் கூறுகிறார்கள். உண்மைக்கும் நேர்மைக்கும் நேர் முரணான கூற்று இது. மொத்தம் பத்தாண்டுக்காலத்தை அவர்கள் படிப்புத் துறையில் செலவிட்ட பிறகே ஆசிரியப் பதவி அவர்களுக்குக் கிடைக்கிறது. பத்து நீண்ட ஆண்டுகளைக் கல்வித் துறையில் செலவிட்ட அவர்களால், ஐந்தாவது வகுப்பு வரை உள்ள சின்னஞ் சிறு பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக்கொடுக்க முடியாது — அதற்குத் தேவையான பயிற்சியும் பக்குவமும் அவர்களிடம் இருக்கமுடியாது என்று எவராவது சொன்னால், அந்தச் சொல்லில் நியாயம் இருக்கிறது என்று எப்படி நாம் ஏற்றுக்கொள்ள முடியும்? பத்தாவது வகுப்பு வரை படித்த செகண்டரி கிரேட் ஆசிரியர்களுக்கு எட்டாவது வகுப்பு வரை சொல்லிக் கொடுக்கிற திறமை இருக்குமானால், எட்டாவது வகுப்பு வரை படித்த ஹையர் கிரேட் ஆசிரியர்களுக்கு ஐந்தாவது வகுப்பு வரை சொல்லிக் கொடுக்கிற தகுதி எப்படி இல்லாமற்போய்விட முடியும்?

—"ஆரம்பக்கல்வி"